விலை ரூபா: 6.00 பக்கங்கள்: பன்னிரண்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை 29 புதன்கிழமை (12.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 55

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## நூலகத் திறப்பு விழாவைத் தடுக்க 14ம் திகதி மறியல் போராட்டம்

### -பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு-

(யாழ்ப்பாணம்)

நிர்மாணப் பணிகள் முற்றுப் பெறாத யாழ்.பொது நூலகத்தை திறந்து வைப்பதை நிறுத்தி வைக்கும் படி கோரி எதிர்வரும் 14ம் திகதி வெள்ளிக்கிழமை பூரண கதவடைப்பும், மறியல் போராட்டமும் நடத்துவதென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைபபுக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக ஒன்றியத்தால நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடை பெற்றது.இதில் யாழ். மாநகர்ப் பகுதியைச் சேர்ந்த 30க்கு மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்காது அடம் பிடித்து நிற்கும் மாநகர முதல்வரின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துப் பலர் கருத்து வெளியிட்டனர்.(11ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை விசாரணை நாளை

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பு மேல் நதி மன்றத்தில் இரண்டாவது நாளாகவும் இடம் பெற்றது. மேற்படி படுகொலை இடம் பெற்றபோது இராணுவத்தின் பிடியில் இருந்து உயிர் தப்பியவரும் வழக்கின் பிரதான சாட்சியுமான பொன்னுத்துரை மகேஸ்வரன் சாட்சியம் அளித்தார்.

வழக்கு விசாரணையில் சந்தேக நபர்களான 5 இராணுவச் சிப்பாய்களும் நீதி மன்றில் அரை மணி நேரம் காலதாமதத்தின் பின்னரே ஆஜர்படுத்தப்பட்டனர் இதற்கு நீதிபதிகள் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.வழக்கு விசாரைண நாளைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம் பெற்ற விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்டுள்ள 5 இராணுவத்தினரும் படுகொலை இடம் பெற்ற போது சீருடையில் இருந்துள்ளனர்.கொலைகளின் (12ம் பக்கம் பார்க்க)

## எனது உத்தரவுகள் உதாசீனம் செய்யப்படுகிறது

# மூன்று புலிகள் உயிரிழந்தமைக்கு பாதுகாப்பு அமைச்சரே பொறுப்பு

### கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி எச்சரிக்கை



(நமது நிருபர்)

**பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தொடர்ந்தும் தனது உத்தரவுகளை உதாசீனம் செய்தால் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லைஎன ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மேற் கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் செயற்பாட்டை விளக்கியுள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் ஹரீம் பரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடந்த இரண்டு தினங்களாக பேர்ளினில் நடந்து முடிந்த அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது சிறுவர்களின் உரிமைகள் (12ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர சபையின் விஷேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் விஷேட கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடை பெறவுள்ளது

இக் கூட்டத்தில் யாழ்.பொது நூலகத் திறப்பு நிகழ்வு தொடர்பாக முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

## சீனா-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான மூன்று ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டன.இலங்கைக்கு நிதியுதவி வழங்குதல்,சலுகை அடிப்படையில் கடனுதவி செய்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கும் வகையிலான இந்த ஒப்பந்தங்கள் நேற்றைய தினம் திறைசேரியில் வைத்து கைச்சாத்திடப்பட்டன.

சீன வெளிவிவகார வர்த்தக கூட்டுறவு அமைச்சர் என்மின்,நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி ஆகியோர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

(உ)

## கூட்டரசாங்கம் அமைப்பதற்கு ஐ.தே.மு. அழைப்பு விடுத்துள்ளதாம்!

### பொ.ஐ.மு பேச்சாளர் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஹலகெதிர அமைப்பாளராக நியமனம் பெற்றபின்னர் நடை பெற்ற முதலாவது கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொது ஜன ஐக்கிய முன்னணி மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடையப்போகிறது என்ற அச்சம் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி இந்த அழைப்பை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சரத் அமுனுகம தொவித்த கருத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சர் ராஜித சேனாரத்தின முற்றாக மறுத்துள்ளார். அரசியல ஆதாயம் தேடும் நோக்கில் சரத் அமுனுகம பொய்ப்பிரசாரம் செய்வதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

(த-8)

## ஜனாதிபதி அறிக்கை குறித்து விழிப்பாக இருக்க வேண்டும்

### அமைச்சர் திஸநாயக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அண்மைக் காலங்களில் விடுத்துள்ள முரண்பட்ட அறிக்கைகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது சுதந்திரதினஉரையின் போது அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சியை பாராட்டியுள்ளார்.ஆனால் பின்னர் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அந்தப் பேச்சுக்களை பரிகசித்து பேசியுள்ளார்.நாட்டின் (12ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உத்தரவினால் படை அதிகாரிகள் தடுமாற்றம்

(கொழும்பு)

ஆயுதங்களுடன் நெடுந்தீவுக் கடற்பகுதியில் நடமாடிய புலிகள் தொடர்பாக கடற்படைத் தளபதிக்கு விடுக்கப்பட்ட ஜனாதிபதியின் உத்தரவு படை அதிகாரிகளுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தரவின் பிரகாரம் கைது செய்யப்படும் புலிகளிடம் இருந்து தாம் இனிமேல் இவ்வாறு நடந்து கொள்வதில்லை என்ற எழுத்து மூல உத்தரவாதம் பெறப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும்.ஆனால் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவின் உத்தரவின் பிரகாரம் ஆயுதங்களுடன் கைது செய்யப்படும் புலிகள் மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் ஆக்கப்பட்டு நாட்டின் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேணடும் என்பதாகும் ஒன்றுக்கொன்று முரணான இந்த உத்தரவுகளால் அதிகாரிகள் மட்டத்தில் தடுமாற்றம் ஏற்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் பிரதிநிதி அகாசி இன்று இலங்கை வருவார்

(கொழும்பு)


ஜப்பானின் உயர்ஸ்தானிகர் ஆலயப் பிரதிநிதி யசுசி அகாசி நான்கு நாள் விஜ்யம் ஒன்றை மேற்கொண்டு மீண்டும் இன்று இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா,எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரையும்;


சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அகாசி சந்தித்துப் பேசவுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திற்கு செல்லவுள்ள இவர் மாவட்டத்தின் சமூகத் தலைவர்களையும் பாராளுமன்ற (12ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





# CRICKET WORLD CUP 2003




# தென்னாபிரிக்கா அணி சுப்பர் சிக்ஸூ க்குச் செல்லுமா?

உலகக்கிண்ணச் சுற்றுப் போட டியின் மூன்றாம் நாளான இன்று தென்னாபிரிக்க அணியை எதிர்த்து கென்ய அணி ஆடுகின்றது.இம் முறை உலகக் கிண்ணத்தை தென் னாபிரிக்காவே கைப்பற்றும் என பரவலாக நம்பப்பட்ட வேளையில் முதலாவது ஆட்டமே தென்னாபி ரிக்காவுக்கு பெரும் சோதனையாக அமைந்து விட்டது. தலை சிறந்த வீரர்களை கொண்ட இவ்வணி மேற்கிந்தியத் தீவுகளிடம் 3 ஓட் டங்களால் தோல்வியடைந்தமை தெரிந்ததே, மீண்டும் ஒரு முறை துரதிஷ்டம் தென்னாபிரிக்காவை துரத்தியது எனலாம் உலகக் கிண்ணக் கோப்பையைக் கைப் பற்றும் என எதிர்பார்க்கப்பட்ட அணி தற்போது சுப்பர்சிக்ஸுக்கு தகுதி பெறுமா என்பது கேள்விக்குறியா கியுள்ளது.

கென்யா அணியைப் பொறுத் தவரை சகலதுறை ஆட்டக்காரர் உடும்பே அணித் தலைவராகவும் திகழ்கிறார்.மிகச் சிறந்த பந்து வீசும் திறனைக் கொண்ட அணி யாகவும் திகழ்கின்றது.எனினும் தென்னாபிரிக்க அணியுடனான போட்டி சற்றுக் கடினமாகவே அமையும் எனவும், எனினும் தாம் இறுதி வரை வெற்றிக்காகப் போரா டுவோம் என அணித்தலைவர் உடும்போ தெரிவித்துள்ளார்.

மேலும உடும்பே கூறுகையில் தென்னாபிரிக்க அணியுடனான ஆட் டத்தில் தாம் தோற்றாலும் தென் னாபிரிக்கா அணியை சாதனை ஏதும் நிகழ்த்த விட' மாட்டோம் ஊவும் தெரிவித்தார். (55)

# ஊக்க மருந்து பாவித்தாராம் அவு. வீரன் வோனுக்கு தடை



உலகக்கிண்ண கிரிக்கெற் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா சென்றிருந்த அவுஸ்ரேலிய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோன் அவ்வணியில் இருந்து நீக்கபபட்டு அவுஸ்ரேலியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பாவித்தார் என்று கண்டு பிடிக்கப்பட்டதை யடுத்து அவர் போட்டிகளில் பங்கு பற்றும் தகுதியை இழந்துள்ளார்.

அவரின் மீது ஊக்க மருந்து சோதனை செய்யப்பட்ட போது விளையாட்டுத் திறனை அதிகரிக்கக் கூடிய மற்றும் நிறைக் குறைப்பைச் செய்யக் கூடிய தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகளை அவர் பாவித்தமை கண்டு பிடிக்கப்பட்டது.இதனை அடுத்து பாகிஸ்தானுடன் நேற்று நடந்த போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டதுடன் உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்கு பற்றத் தடை விதிக்கப்பட்டது.

இதேவேளை அடுத்த சில நாட்களில் ஊக்க மருந்து பாவித் தமை தொடர்பான சோதனை செய்யப்பட்டு அதில் ஊக்கமருந்து பாவிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டால் அவர் இரண்டு வருடங்க ளுக்கு முற்றாகப் போட்டிகளில் விளையாடத் தடை செய்யப்படும். அதன் பின்னர் விளையாடுவது குறித்து அவுஸ்ரேலியக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்யும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்ரேலிய அணியின் முக்கிய வீரராகத் திகழும் ஷேன்வோ னின் வெளியேற்றம் அவ்வணியின் வெற்றிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடி கிண்ணத்தை வென்ற அவுஸ்ரேலிய அணியின் வெற்றிக்கு ஷேன்வோன் முக்கிய காரணமாக இருந்ததுடன் அப் போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (55)

## இன்றைய ஆட்டங்கள்

**தென்னாபிரிக்கா எதிர் கென்யா**
(நோர்த் வெஸ்ற் மைதானம்)

**இந்தியா எதிர் நெதர்லாந்து**
(போலண்ட் பார்க் மைதானம்)

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### அவுஸ்ரேலியா எதிர் பாகிஸ்தான்

### அவுஸ்ரேலியா

50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 310 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| கில்கிறீஸ்ட் | 01 | வசிம்அக்ரம் | C |
| மத்யூகேய்டன் | 27 | வசிம்அக்ரம் | B |
| றிக்கிபொன்டிங் | 53 | அகதர் | C |
| டேமியன் மாட்டின் | 00 | வசிம்அக்ரம் | B |
| ஜேம்ஸ் மேஹர் | 09 | வஹார்யுனிஸ் | C |
| சீமன்ட்ஸ் | 143 | | Not Out |
| ஜோர்ஜ்ஹொக் | 14 | | R.O |
| இயன்ஹர்வி | 24 | அக்தர் | C |
| பிரெட்லீ | 02 | வஹார்யுனிஸ் | C |
| ஜிலெஸ்பி | 06 | | Not Out |

உதிரிகள் – 31

### பாகிஸ்தான்

44.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| த.'.பிக்உம்ர் | 21 | பிரெட்லீ | C |
| ஷாகிட் அப்ரிட்டி | 01 | ஜிலெஸ்பி | C |
| சலீமஎலாஹி | 30 | இயன்ஹர்வி | C |
| .இன்சமாம் ஹக் | 06 | மக்ராத் | C |
| யொஹானா | 27 | இயன்ஹர்வி | C |
| யுனிஸ்கான் | 19 | ஹொக் | C |
| அப்துல்ரசாக் | 25 | ஹொக் | C |
| ரஸிட்லத்தீவ் | 33 | ஹொக் | B |
| வசீம் அக்ரம் | 33 | இயண்ஹர்வி | C |
| வக்காயுனிஸ் | 06 | இயண்ஹர்வி | C |
| அக்தர் | 00 | | Not Out |

உதிரிகள் – 27

### பந்து வீச்சு - பாகிஸ்தான்

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| வசீம் அக்ரம் | 10 | 64 | 3 |
| அகதர் | 10 | 45 | 2 |
| வஹார்யுனிஸ் | 8.3 | 50 | 2 |
| அப்துல் றசாத் | 06 | 42 | 0 |
| ஷாகிட்அப்ரிடி | 9.3 | 63 | 0 |
| யுனிஸ்காண் | 06 | 36 | 0 |

### பந்து வீச்சு - அவுஸ்ரேலியா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| மக்ராத் | 10 | 39 | 1 |
| ஜிலெஸ்பி | 08 | 28 | 1 |
| பிரெட்லீ | 07 | 37 | 1 |
| இயன்ஹர்வி | 09.3 | 58 | 4 |
| ஹொக் | 10 | 54 | 3 |

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி. கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

**உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.




**உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்**

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ............
முகவரி : ............
தே.அ.அ.இல : ............
கையெப்பம்: ............

**அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி மார்ச் 15, 2003**

## தரம் 5 புலமைப்பரிசில் வினா (01) விடைகள்

01. இருவர்
02. 6,9,3,4
03. 9643
04. 3469
05. 7
06. **D**
07. எண்
08. **F**
09. ● ▭
10. ◨
11. பொருத்தமான விடை
12. பொருத்தமான விடை
13. இலங்கை
14. பேருந்து
15. தொலைபேசி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | 3 | 17. | 4 | 18. | 1 |
| 19. | 4 | 20. | 3 | 21. | 5 |
| 22. | 3 | 23. | 4 | 24. | 2 |
| 25. | 4 | 26. | 1 | 27. | 4 |
| 28. | 2 | 29. | 2 | 30. | 3 |
| 31. | 4 | 32. | 3 | 33. | 2 |
| 34. | 4 | 35. | 2 | 36. | 2 |
| 37. | 3 | 38. | 3 | 39. | 3 |
| 40. | 5 | | | | |

# ஈராக் பிரச்சினை தீர்த்த பின்னரே அனானின் இலங்கை விஜயம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது தோன்றியுள்ள பதற்ற சூழ்நிலை காரணமாக ஆசிய நாடுகளிற்கான விஜயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் இடை நிறுத்தி இருப்பதாக வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மாதம் 26 ஆம் திகதி கோபி அனான் இருநாள் விஜய மொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வர ஏற்பாடாகி இருந்தது.

ஈராக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்ட பின்னரே அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என அறிவித்திருப்பதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் செயலாளர்நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் போது யாழ். மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்கான விஜயத்தை மேற்கொள்வாரானால் அதற்கெதிரான போராட்டங்களில் ஈடுபடுவோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச குரலெழுப்பியமை தெரிந்ததே. (உ-8)

## கத்திக்குத்துக்கு இலக்காகி மரணம்

(யாழ்ப்பாணம்)

உறவினர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்தது.

அண்மையில் துன்னாலை தெற்கு கரவெட்டி பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான பொ. விஜயரட்ணம் (வயது 44) என்பவரே கத்திக்குத்துக் இலக்காகி உயிரிழந்தவராவார்.

உயரிழந் தவரின் சடலம் வைத்திய பரிசோதனையின் பின் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது. (த-3)

## டெங்கு ஒழிப்பு பிரசுரம்

(உடுவில்)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் சுகாதார கல்விப் பணியகத்தினாலும், சுகாதார அமைச்சினாலும் டெங்கு ஒழிப்புத் தொடர்பான துண்டுப்பிரசுரம் "நாங்கள் பாதுகாப்பாக இருப்போம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. (உ-261)

## தென்கிழக்காசியாவின் கண்காட்சி நிலையம் இலங்கையில் அமையும்

(கொழும்பு)

தென்கிழக்காசியாவின் பிரதான கண்காட்சி நிலையம் ஒன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

கண்காட்சி நிலையத்துக்கு உலகின் முதலாவது பெண்பிரதமரான ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவின் பெயர் சூட்டப்படவுள்ளது.

இந் நிலையத்தின் முதலாவது கண்காட்சியாக சர்வதேச வர்த்தக கைத் தொழில் கண்காட்சி எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியினை சிறு கைத்தொழில் சம்மேளனமும், கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சும் கூட்டாக ஒழுங்கு செய்துள்ளன. (உ-8)

## நெதர்லாந்து தூதுவராக புதியவர்

(கொழும்பு)

நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக முன்னாள் அமைச்சர் நாகா கருணாதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதமளவில் இவர் தனது கடமைகளை பொறுப்பேற்க வுள்ளார். (உ-8)

## மிதிவெடி அகற்றல்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பிரதேசத்தில் நுணாவில் பகுதியில் கண்டுவீதிக்கு வடக்கே சுமார் ஒரு கிலோமீற்றர் பிரதேசத்தில் ஹெலோ ட்ரெஸ்ற் அமைப்பு மிதிவெடி அகற்றி வருகின்றது.

இதற்கு எதிர்புறத்தில் பாரிய இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (த-37)

# பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவில் தீவிர நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைமைப்பகுதி அண்மையில மாற்றப்படடது. இதனைத் தொடர்ந்து விசாரணைப் பிரிவில் மேலும் நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இதனால் நிர்வாக ரீதியான பிரச்சினைகளும் தோன்றியுள்ளன.

இதனால், விசாரணைப்பிரிவின் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் தொடர்பாக நீதிமன்றம் விதித்த உத்தரவை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமநாயக்கா மீது, பொலிஸ் உத்தியோகத்தர்களை பயமுறுத்தினார், ஆணைக்குழுவின் இரகசியத் தகவல்களை ஜனாதிபதிக்கு வழங்கினார் என்ற குற்றச் சாட்டுகள் ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ளன.

இக்குற்றச் சாட்டுக்கள் குறித்த வேண்டுகோள் ஒன்று சபாநாயகரிடம் விடுக்கப்போவதாக அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க.8)

# வலம்புரி நடத்திய தரம் ஆறு மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி முடிவுகள்

**1 ஆம் இடம்:-**
செல்வி.வியாகேச சர்மா - கிரிஜா
நீர்வேலி சீ.சீ.தமிழ் பாடசாலை

**2 ஆம் இடம்:-**
செல்வி. த.தர்ஷிகா மானிப்பாய் மருதடி ஆலய அறநெறிப் பாடசாலை

**3 ஆம் இடம்:-**
செல்வன். சிறிஸ்கந்தராஜா தனுஷன் சுதுமலை, சிநமயபாரதி வித்தியாலயம்,மானிப்பாய்.

### சான்றிதழ் பெறுவோர்கள்

1. செல்வன். கலொக கணநாதன் உஷாந்தன் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
1. செல்வி. சிதம்பரநாதன்-யசோதினி இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம்.
3. செல்வி. ஸ்ரீகரன் கிருஸ்சுயா ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்,புத்தூர்.
4. செல்வன். ச.சத்திபாலன் மானிப்பாய் மருதடிஆலய அறநெறி பாடசாலை.
5. செல்வி. பீற்றர் ஆன்திலோஜினி திருக்குடும்பக் கன்னிர் மடம், யாழ்ப்பாணம்.
6. செல்வி. பஞ்சலிங்கம் அம்பிகை வேப்படி மகளிர்கல்லூரி.
7. செல்வி. சி.கஸ்தூரி மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை.
8. செல்வன். சண்முகராஜா யதுகுலன் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
9. செல்வி. ஆனந்தராஜாயோகினி அத்தியடி இந்துக்கல்லூரி நீர்வேலி.
10. செல்வன். அ.போர்த்தீபன் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
11. செல்வி. அ.கேமா மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை.
12. செல்வி. செல்லத்துரை சரிதா யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை.
13. செல்வி. கு.அர்ச்சனா கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.
14. செல்வி. இராஜேஸ்வரன் தர்சினி குப்பிளான் விக்கினேஸ்வர மகாவித்தியாலயம் குப்பிளான்,ஏழலை.
15. செல்வி. சனாதனசர்மா சுரேந்தினி மல்லாகம் மகாவித்தியாலயம்.
16. செல்வி. ச.துஷிந்தா மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை
17. செல்வன். தனிரோஜன் கிருஷ்ணகுமார் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலை.
18. செல்வி. வரதராஜா கஜானி யா/ இந்து மகளிர் கல்லூரி
19. செல்வீன். ம.கோபிநாத் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
20. செல்வன். க. மதுராகரன் மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை.
21. செல்வன். கி. உதயசங்கர்மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை.
22. செல்வன். நா.சிந்துஜன் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.
23. செல்வன். லிங்கேஸ்வரன் சஜீபன் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம் புத்தூர்.
24. செல்வன். சு. பிரதாப் மானிப்பாய் மருதடி ஆலய அறநெறி பாடசாலை.
25. செல்வன். அ.நிரின் புளோரிட் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
26. செல்வி. ச. ருசாந்தா மானிப்பாய் மருதடி ஆலய அறநெறிப் பாடசாலை.
27. செல்வி. த. வதனி மானிப்பாய் மருதடி ஆலய அறநெறிப் பாடசாலை.
28. செல்வன். கமேலேஸ்வரன் துவாரகன் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாசாலை வரணி.

பரிசில்கள் அமரர் ச.அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக வழங்கப்படும். 15.02.2003 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வலம்புரி காரியாலயத்தில் பரிசளிப்பு நடைபெறும்.

கட்டுரைப்போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களுக்கும் அவர்களை ஊக்குவித்து வழிநடத்திய அதிபர் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


# யாழ் நகரில் கால் பதிக்கிறது
# British Business School

இதுவரை தலைநகரில் மட்டுமே தனது சேவையை வழங்கி வந்த, இலங்கையின் தரம் வாய்ந்த முன்னணி நிறுவனமான பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல் **(British Business School)** தனது சேவையை யாழ். நகருக்கும் விரைவில் விஸ்தரிக்கவுள்ளது.

பிரித்தானிய மற்றும் கனேடிய அங்கீகாரம் பெற்ற பல கணனி, வர்த்தக, கணக்கியல், ஆங்கிலப் பாடநெறிகளை நடாத்தி வரும் இக் கல்லூரியானது, அதன் தரம் வாய்ந்த கற்பித்தல் மற்றும் ஏனைய செயல்பாடுகள் காரணமாக பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள், கம்பனிகள், தொழிலதிபர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இக்கல்லூரியின் யாழ். கிளையின் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையாக ஆங்கில மொழிப் பாடநெறிக்கான பாடசாலையானது யாழ். கோவில் வீதியில் யாழ்ப்பாணம் சிற்றி கம்பஸ் **(Jaffna city Campus)** என்ற பெயரிலும் இதன் இன்னொரு அங்கமான சர்வதேச பாடசாலையானது யாழ். கச்சேரிக்கு அருகாமையில் கண்டி வீதியில் யாழ்ப்பாணம் கச்சேரி கம்பஸ் **(Jaffna Kachcheri Campus)** என்ற பெயரிலும் அமையவுள்ளது.

தொடர்ந்து வரும் காலங்களில் வர்த்தகம், நிதியியல், கணனி மற்றும் இலண்டன், **O/L, A/L, CIMA, AAT, AIB, IAB, ACCA, CAT, CHARTERED, CMA** ஆகிய பாடநெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆங்கில மொழிப் பாடநெறிக்கான பாடசாலை **(Jaffna city Campus)** எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி கனேடியத் தூதரகத்திற்கான முன்னாள் ஆலோசகர் மைக்கல்கொடுலேயினால் யாழ். கோவில் வீதியில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் இயக்குநர்களாக **CIMA, AAT, Chartered** ஆகியவற்றின் முன்னைநாள் தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளரும், நிர்வாக இயக்குநருமான டாக்டர் பி. ஆனந்தகுமார், நிதி மற்றும் திட்டமிடல் இயக்குநர் டாக்டர் ஆர். பவானந்தன் **(ACMA)**, கல்வி அமைச்சின் பேரவை உறுப்பினர் டாக்டர் குமாரசாமி நந்தகுமார், யாழ். முன்னணி ஆசிரியர் திருமதி தம்பையா ஆகியோர் பணியாற்றுவர்.

இக்கல்லூரியின் மூலம் யாழ். மக்களின் ஆங்கில மொழி அறிவு மற்றும் ஏனைய தொழிற்துறைசார் அறிவு செயலாற்றல் என்பன வளர்க்கப்படுவதுடன், இதன் காரணமாக நல்ல முன்னேற்றகரமான தொழில்துறை மிக்க சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டு அத்தொழிற்றுறை மிக்க சமுதாயத்தால் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனத்தை யாழ். மக்கள் பால் ஈர்க்க முடியும் என நம்பப்படுகிறது.

மனிதாபிமான திட்டங்கள்பற்றி ஆராய

# பாதுகாப்புச்சபையை அவசரமாக அழைக்கின்றார் கோபி அனான்

(நியூயோர்க்)

ஈராக் மீது எந்த நேரமும் தாக்குதல் ஒன்றை அமெரிக்கா நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதால், அப்படியான ஒருநிலைமையில் எம்மாதிரியான மனிதாபிமான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது பற்றி ஆராய ஐ.நா.பாதுகாப்புப் பேரவையை அழைத்திருக்கிறார் செயலாளர் நாயகம் கோபி அனான்

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் எத்தகைய மனிதாபிமான திட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாக ஆராய ஐ.நா பாதுகாப்புப் பேரவையைக் கூட்டுவதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் தீர்மானித்துள்ளார்.

இந்தமுக்கிய கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு பாதுகாப்புப் பேரவை உறுப்பினர்களிற்கு அவர் அழைப்புவிடுத்துள்ளார்.

### பாப்பரசருடன் ஆலோசனை

வியாழக்கிழமை நடைபெற உள்ள இந்தக் கூட்டத்திற்கு முன்பாக கோபி அனான் பரிசுததப் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை சந்திக்க உள்ளார்.

ஈராக் போரைத் தடுப்பதில் பரிசுத்த பாப்பரசரும் முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக் விவகாரத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க முடியும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள கோபி அனான் மோசமான விளைவுகள் ஏற்படுத்துவதற்கு முன்னர் மனிதாபிமான நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம் எனவும் கூறியுள்ளார்.

### போரைத் தடுக்கும்முயற்சி தீவிரப்படுத்த முடிவு

அமெரிக்காவின் தலைமையில் ஈராக் மீது போர் தொடுக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதில் கடும் முயற்சிகளை எடுத்து வரும் பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மன ஆகிய மூன்று நாடுகளும் ஈராக்கில் ஆயுதக் களைவை பிரச்சினை இன்றி மேற்கொள்வதற்கு இன்னும் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று கோரியுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிரான் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகிய இருவருக்குமிடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து மூன்று நாடுகளும், கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் ஆயுத சோதனைகள் தொடர்ந்தும் இடம் பெறுவதற்கு தமதுஆதரவை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ள 3நாடுகளும் அமைதியான முறையில் ஆயுதக் களைவை மேற்கொளவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளன.

இன்றைய சூழ்நிலையில் போர் ஒன்று மூழ்வதை எவரும் நியாயப்படுத்த மாட்டார்கள என்று பிரான்ஸ் ஜனாதிபதி கூறியுள்ளார். (பி-9)




ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாம என்று குழந்தை மூலம் குரல் கொடுக்கும இந்தோனேசியத் தாய். தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள அமெரிககத் தூதரகம் எதிரே ஞயிற்றுக் கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தில 7ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

# உடனடியாக போர் தொடுக்க அனுமதி கோருகிறது அமெரிக்கா

(நியூயோர்க்)

ஐ.நா.தீர்மானத்துக்கு ஈராக் உடன்படாவிடில் அந்நாட்டின் மீது போர் தொடுக்க உடனடி அங்கீகாரத்தை வழங்குமாறு பாதுகாப்புச் சபைக்கு அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

ஈராக் மீது அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஐ.நா பாதுகாப்புச்சபை உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவல் வலியுறுத்தினார்.

அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனத்துக்கு இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் பேட்டியளித்தார்.

ஐ.நா ஆயுத சோதனையாளர்களுக்கு ஈராக் முழு ஒத்துழைப்பை அளிக்கவில்லை. அவர்களது அறிக்கை வெள்ளிக்கிழமை ஐ.நா பாதுகாப்புச்சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஆயுத சோதனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து ஈராக்கில் தொடர்ந்து ஆய்வு நடத்த வேண்டும் என பிரான்சும் ஜேர்மனியும் தெரிவித்துள்ள யோசனையை ஏற்க இயலாது.

ஈராக்கில் ஐ.நா துருப்புகளை நிறுத்தி அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என சில நாடுகள் தெரிவித்துள்ள யோசனையும் பயன்தராது என்றார் கொலின்பவல்.

ஆயுதப் பரிசோதகர்கள் தங்களது இறுதி ஆய்வறிக்கையை 14ஆம்திகதி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்க உள்ளனர். இந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

ஈராக் மீது போர் தொடுக்க பாதுகாப்புச் சபையில் அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று அமெரிக்கா கோரி வருகிறது.

ஈராக்கில் நடத்தப்பட்ட ஆய்வில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பணியில் கவனமாகச் செயல்பட வேண்டியுள்ளது என்று சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் இயக்குநரும் ஐ.நா ஆயுத சோதனைக்குழு அதிகாரியுமான முஹம்மது எல்பரடேய் தெரிவித்தார். (பி)

### ஈராக் நடமாடும் இராணுவ முகாம் மீது விமானத்தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கின் நடமாடும் இராணுவ நிலையம் ஒன்றின் மீது அமெரிக்க பிரிட்டன் கூட்டு விமானப்படை தாக்குதல் நடத்தியுள்ளன.

விமானங்கள் பறப்பதற்குத் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிக்கு அச்சுறுத்தலாக இந்த நடமாடும் இராணுவ நிலையம் இருந்ததாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலின் போது, நடமாடும் இராணுவ நிலையம் முற்றாக அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

WORLD NEWS உலக தரிசனம்



ஐ.சி.சி உலகக்கிண்ணப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் ரசிகர் ஒருவர் நிகழ்த்திய சாகசம ஒன்றினையே இங்கு காண்கிறீர்கள்.

# 20லட்சம் முஸ்லிம்கள் ஈராக்கிற்காக பிரார்த்தனை

(சவூதி அரேபியா)

ஹஜ்புனிதப் பயணம் மேற்கெண்டுள்ள 20லட்சம் முஸ்லிம் யாத்திரீகர்கள், திங்கட்கிழமை அரபாத் மலைப்பகுதிக்கு வந்தனர்.

1400வருடங்களுக்கு முன் முகமது நபி(சல்) இங்குதான் கடைசி உரையாற்றினார்.

உலகில் அமைதி நிலவ வேண்டும் என்றும், ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்காமல் இருக்க வேண்டும என்றும் அரபாத்தில் கூடிய முஸ்லிம்கள் சிறப்புத்தொழுகை நடத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை மக்காவில் உள்ள பெரிய மசூதியில் சிறப்புத்தொழுகை நடத்திய முஸ்லிம் யாத்திரீகர்கள், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை மினா பள்ளத்தாக்குப்பகுதிக்கு வந்தனர். மினாவில் தங்கிய அவர்கள், அங்கிருந்து 7கி.மீ தொலைவில் உள்ள அரபாத் மலைப்பகுதிக்கு நடந்தும், வாகனங்கள் மூலமும் திங்கட்கிழமை வந்து சேர்ந்தனர்.

ஈராக்கியர்கள் எங்கள் சகோதரர்கள். நாங்கள் போரை விரும்பவில்லை. ஈராக்கியர்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும என்று அல்லாவிடம் பிரார்த்தனை செய்ததாக துருக்கி மற்றும் எகிப்திலிருந்து வந்த முஸ்லிம் யாத்திரீகர்கள் சிலர் தெரிவித்தனர்.

அரபாத்திலிருந்து முஸ்லிம்கள், முஸ்தாலிபா என்ற இடத்துக்குச்சென்று கற்களைப் பொறுக்கிக் கொண்டு மினாவுக்கு திரும்பி வருவார்கள். அங்குள்ள மூன்று தூண்கள் மீது கற்களை வீசி எறிவார்கள். மனதில் எழும் ஆசை என்னும் சாத்தானை விரட்டி அடிப்பதாக இதற்கு பொருள் கொள்ளப்படும். (பி)

# முக்கிய ஆவணங்களை ஈராக் கையளித்தது

(பக்தாத்)

ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர்களிடம் ஈராக் சில முக்கிய ஆவணங்களை நேற்றுக் கையளித்துள்ளது.

இந்த அறிக்கைகளை விரிவாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக் கையளித்த அறிக்கைகளின் விபரங்கள் எதனையும் வெளியிட மறுத்துளளதுடன்,

பிரதம ஆயுதப் பரிசோதகர் ஹான்பிளிக்ஸ் மற்றும் மொஹமட் எல்பரடே ஆகியோருடன் ஈராக் ஜனதிபதியின் ஆலோசனையுடன் நீண்ட நேரப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை திருப்திகரமாக அமைந்ததாக பிளிக்ஸ் தெரிவித்துள்ளார். (பி-9)


### குர்திஷ் தளபதி சுட்டுக் கொலை


(சுலேமானியா)

ஈராக்கின் வடக்குப் பகுதியில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் குர்திஷ் தளபதி மற்றும் 5பேரை சனிக்கிழமை சுட்டுக்கொன்றுள்ளனர்.

அல்கெய்தா தீவிரவாதிகளுடன் தொடர்புடைய அன்ஸார் அல் இஸ்லாம் என்ற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புதான் இச்சம்பவத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இதில் முஷீர், அவரது பாதுகாவலர் இருவர், மற்றும் மூவர் கொல்லப்பட்டனர். (பி)





மூன்று நாள் சுற்றுப்பயணமாக டில்லி வந்துள்ள பிரெஞ்சு நாட்டுப் பிரதமர் ஜீன் பியரி ரபரினை ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் வாஜ்பாய் வரவேற்பதனை முதலாவது படத்திலும், இராணுவ அணிவகுப்பை பிரெஞ்சுப் பிரதமர் ஏற்றுக் கொள்வதனை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கடமைக்கு தாமதமாகச் செல்லும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## உள்ளூராட்சி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ள அரச உத்தியோகத்தர் தாம் வேலை செய்யும் காரியாலயங்களுக்கு நேரகாலத்தோடு கடமைக்குச் செல்லாது விட்டால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகார அறிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 25 சதவீத ஊழியர்கள் கடந்த இரு நாட்களாக நேரந்தவறி கடமைக்குச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

உள்துறை மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவினர் நடத்திய மதிப்பீட்டிலும் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் பிரதேச செயலகங்களில மக்கள் தம் அன்றாடக் கருமங்களை ஆற்றுவதில் பல சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளமையும் நேரடியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், சில பிரதேச செயலரகள் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் வசிப்பிதில்லை என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நேரகாலத்தோடு கடமைக்குச் சமூகம் கொடுக்காத ஊழியர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் கண்டிப்பாக அறிவித்துள்ளார். (வ-10)

# பொ.ஐ.மு.- ஜே.வி.பி. கூட்டு சேர்வது குறித்த கூட்டம் நாளை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் கூட்டுச் சேருவது தொடர்பான கூட்டம் நாளை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரி பால சிறிசேன, கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, அனுரா திஸ்ஸநாயக்கா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் இரு கட்சிகளும் அரசியலில் இணைந்து கொள்வது தொடர்பாக கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

அத்துடன், இரு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து அரசியலில் ஈடுபடுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இரு தரப்பினரும் கைச்சாத்திடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையை கண்டிக்கிறது கல்வி மேம்பாட்டுப் பேரவை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூவரும் தம்மைத் தாமே அழித்துக் கொண்ட துயரம் மிக்க சம்பவத்துக்கான முழுப் பொறுப்பும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினதேயாகும். கண்காணிப்புக குழுவினது அசமந்தப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ். கல்வி மேம்பாட்டுக் கழகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பத்திரிகைக் குறிப்பில் மேலும்,

கடந்த காலங்கள் போலவே கடற்படையினர் புலிகளை சீண்டிப் பார்த்திருக்கின்றார்கள். ஆனால், புலிகள் பொறுமையாக முறையாகப் புரிந்துணர்வு உடன்பாட்டை மதித்து உரிய தரப்புகளுடன் தகவல்களைப் பரிமாறி தமது படகினை சோதனையிட அனுமதி வழங்கித் தமது இக்கட்டான நிலைப்பாட்டை முழுமையாக விளங்கப்படுத்தியும் உரிய தீர்வு கிட்டாத நிலையில் தம்மை அழித்துள்ளனர்.

இவ்வளவு விளக்கத்தின் பின்பும் போதிய கால அவகாசம் இருந்தும் கண்காணிப்புக் குழு தனது கடமையைச் செய்யத் தவறி உயிர்களைப் பலிகொண்டது வேதனையையும் கண்காணிப்புக் குழுவில் சந்தேகத்தையுமே ஏற்படுத்துகின்றது.

கண்காணிப்புக் குழு அரச படைகளின் நலன் பேணும் அமைப்பாக இருப்பதாகவே தீவகச் சம்பவம் குறித்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கையைப் பார்க்க முடிகிறது. முன்பின் முரணாக குரல் கொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன? என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது.

மேலும், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு வருடமாகின்ற போதும் மக்கள் உரிமையை மதித்து மனிதாபிமான ரீதியில் தீர்க்கப்படவேண்டிய தமது மண்ணில் குடியிருக்கும் உரிமை தமது பாடசாலையில் கல்வியைத் தொடரும் உரிமை, வழிபாட்டுரிமை என்பவை தீர்க்கப்படாமலேயே இருப்பது குறித்து பாராமுகமாக இருப்பதும் எமது கேள்விக்கான நியாயப்பாட்டை வலுவுடையதாக்குகின்றது.

கண்காணிப்புக் குழுவினரது பக்கச்சார்பைக் கண்டிப்பதோடு இனிவரும் காலங்களிலாவது புரிந்துணர்வு உடன்பாட்டை மதித்து மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## காணாமல் போனோர் குறித்த

# விசாரணைகளுக்காக உறவினர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1996 ஆம் 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர்களின் பின்வரும் உறவினர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விசேட புலனாய்வுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

அமிர்தானந்தர் அசோகன் (கைதடி மத்தி), அமிர்தானந்தர் கிறிஸ்ரி ஜெயநாதன் (கொழும்புத்துறை), அன்தோன் மகேந்திரன், ஜீவகுமார் ஸ்ரீதரன் (10/4 கண்டி வீதி, குருநகர்), அன்ரன் கிளிட்டஸ் (சுதுமலை மானிப்பாய் தெற்கு), அந்தோனி பாக்கியநாதர் (3ஆம் குறுக்குத் தெரு, பாசையூர்), அப்பையா கேதாரகௌரி (கைதடி), அருளானந்தன் சாள்ஸ் (50/3 இராசலிங்கம் வீதி யாழ்ப்பாணம்), அருளானந்தம் உதயகுமார் (34, 3ஆம் குறுக்குத் தெரு, அராலி வீதி), எப்.எக்ஸ்.றொசான் (46, சுவாமியார் வீதி கொழும்புத்துறை), ஜி.பரமானந்தன் (12, செம்மணி வீதி, அரியாலை), எச்.எச்.குணநாதன் (தலங்காவல் பிள்ளையார் கோவிலடி திருநெல்வேலி), ஜெ.தியாகராசா (160, கண்டி வீதி, அரியாலை), யேசுதாசன்-வெலன்டைன் (78/11 பீச் றோட், நாவாந்துறை), கஜேந்திரன்-தேவராசா (அரியாலை), எம்.கரிகரன் (75, பொன்னம்பலம் வீதி, அரியாலை), த.மீனாட்சி (அரியாலை), ம.மதிகரன் (19, சின்னாலைக் கண்டு லேன், அரியாலை), ஆர்.ஆர்.லெபனான் (115, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.சுரேஸ்வரன் (நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.வசந்தகுமார் (38, சின்னாலைக் கண்டு லேன், அரியாலை), ச.சந்திரசேகரன் (கண்டி வீதி அரியாலை), ச.பரஞ்சோதி (பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி), சதீஸ்வரன் (பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி), செ.செல்வராசா (558, சென் செபஸ்தியார் வீதி, யாழ்ப்பாணம்), சு.கமலசோதி (36, கனகரத்தினம் வீதி, அரியாலை), ரீ.எஸ்.ஜேம்ஸ் சதீஸ் (17, வீடமைப்பு திட்டம் குருநகர்), தர்னவசக்ரன் (10, கலைமகள் வதி, அரியாலை), கே.துரை (ஏ.வி.றோட், அரியாலை), வி.எம்.குலசேகரம் (15, ஏ.ராஜசிங்கம் வீதி குருநகர்), வசந்தகுமார்-சபாரத்தினம் (38, சின்னாலைக் கண்டு லேன்-அரியாலை), நடராஜசிங்கம்-விநாசித்தம்பி (அம்பலவாணன் வீதி, பொக்கணை), ரங்கநாதன் கந்தசாமி (முள்ளி வாய்க்கால்), பரமேஸ்வரன் முத்துராசா (பழைய பெருமாள் காடு வட்டக் கண்டல்), கமிஸ்ரஸ் முதியப்பு (23, 3ஆம் குறுக்குத் தெரு, குருநகர்), சிவபாலசிங்கம்-ஆறுமுகம் (அம்பலவாணன் பொக்கணை முள்ளிவாய்க்கால்) (உ-10)

## காசோலையைப் பெறலாம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சிறுவர் திறன் விருத்திப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு காசோலையாக நேற்றுத் தொடக்கம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

இக்காசோலையின் செல்லுபடித் திகதி இம்மாதம் 15ஆம் திகதி என்பதால் வெற்றி பெற்ற சிறுவர்கள மேற்படி காசோலையை உடன்பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-37)

## கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியிலுள்ள வலி கிழக்குப் பிரதேச சபைப் பெயர்ப்பலகை மீது இனந்தெரியாதோர் மீண்டும் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். கல்வீச்சைத் தடுக்க முற்பட்ட காவலாளி மீதும் கல்வீச்சு மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த)



பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி றெனோல்ட் முசோலியர் யாழ். பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை யாழ். மாநகர முதல்வர் எஸ்.கந்தையனிடம் கையளிக்கிறார்.



பிரான்ஸ் அமைச்சர் புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை பார்வையிடுகின்றார்.



யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்றபோது பணிப்பாளரினால் புனரமைப்பு திட்ட வரைபு கையளிக்கப்பட்டது.



அல்லைப்பிட்டியில் பிரான்ஸ் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள அரை நிரந்தர வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லை அமைச்சர் நாட்டி வைக்கிறார்.

இலங்கைக்கான பிரான்ஸ் துாதுவர் செல்வி மாரி பிரான்ஸ் பக்ளியர் அரை நிரந்தர வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைக்கிறார்.



# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
**வினா இல : 03 ஆக்கம் : சுந்தர் வெளியீடு**

கீழே தரப்பட்டுள்ள படங்களை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள தரவுகளையும் தொடர்புபடுத்தி விடை எழுதுக.




- பிந்து மிகவும் உயரமான பையன்
- நந்து மிகவும் பருமன் கூடிய ஒருவர்
- சுந்து மெல்லிய உயரமான பெண்பிள்ளை
- கந்து கட்டையான தலைமுடியுடைய பெண்பிள்ளை
- சிந்து எப்போதும் இரட்டைப் பின்னலுடன் காணப்படுவார்.

**இந்தத்தரவுகளுக்கேற்ப பின்வரும் பெயர்களையுடையோரைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் பெயரிடுக.**

01. பிந்து ☐ 02. நந்து ☐ 03) சுந்து ☐
04. கந்து ☐ 05. சிந்து ☐

**கீழ்வரும் விலைப்பட்டியலை அவதானித்து அதற்கமைய விடை எழுதுக.**


| | | | |
|---|---|---|---|
| தீப்பெட்டி 1 டசின் - | 36/= | அப்பியாசக் கொப்பி - 1 - | 15/= |
| சீனி 100 கிராம் - | 6/= | பாண் 1 இறாத்தல் - | 13/= |
| சீத்தைத் துணி 1மீற்றர் | 125/= | கீரை 1 பிடி - | 3/= |

06. 500 கிராம் சீனியின் விலை என்ன?..........................................
07. 5 மீற்றர் சீத்தைத் துணியின் விலை என்ன?..........................................
08. 8 பிடி கீரையின் விலை என்ன?..........................................
09. ரூபா 20.00 கொடுத்து 1 இறாத்தல் பாண் வாங்கும் ஒருவருக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?..........................................
10. 20 ரூபா தாள் ஒன்றும் 10 ரூபா தாள் ஒன்றும் கொடுத்து 1 டசின் தீப்பெட்டி வாங்கும் ஒருவருக்கு இன்னும் எவ்வளவு பணம் தேவைப்படும்..........................................

**கீழே தரப்பட்டுள்ள ஐந்து சொற்களில் ஒருசொல் ஏதோ ஒரு காரணத்தால் வேறுபட்டு நிற்கிறது. அச்சொல்லை இனம் கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

11. 1) அப்பா 2) அம்மா 3) அண்ணா 4) தம்பி 5) அப்பப்பா
12. 1) குளிர்நீர் 2) சுடுநீர் 3) பழப்பாகு 4) தேனீர் 5) குளிர்பானம்
13. 1) பலாப்பழம் 2) மிளகாய்ப்பழம் 3) வாழைப்பழம் 4) மாம்பழம் 5) தோடம்பழம்
14. 1) இடியப்பம் 2) சோறு, கறி 3) பிட்டு 4) தோசை 5). அப்பம்
15. 1) பூனை 2) நாய் 3) புலி 4) ஆடு 5) மாடு

**கீழேஉள்ள படத்தை அவதானித்து விடை எழுதுக.**




16. வட்டத்திற்குள்ளே உள்ள எண்கள் எவை?..........................................
17. முக்கோணியின் உள்ளே உள்ள எண்கள் எவை?..........................................
18. வட்டம், முக்கோணம் இரண்டிற்கும் வெளியே உள்ள எண்கள் எவை?..........................................
19. வட்டத்தினுள் உள்ள எண்களின் கூட்டுத்தொகை யாது?..........................................
20. இங்குள்ள எண்கள் யாவற்றினதும் கூட்டுத்தொகை எவ்வளவு?..........................................

**கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21. விமானங்கள் தரித்து நிற்கும் இடம்..........................................
22. புகையிரதங்கள் தரித்து நிற்கும் இடம்..........................................
23. கப்பல்கள் தரித்து நிற்கும் இடம்..........................................
24. பேருந்து (bus) தரித்து நிற்கும் இடம்..........................................
25. துவிச்சக்கர வண்டிகள் பாதுகாப்பாக நிறுத்தப்படும் இடம்..........................................

**சரியான விடைகளைத் தெரிவு செய்க.**


26. 2,8 ஆகிய எண்களைக் கொண்டு ஆக்கத்தக்க மிகவும் பெரிய எண் (28,82)
27. மிகவும் சிறிய இரட்டை எண் (2, 3)
28. முக்கோணம் ஒன்றின் பக்கங்களின் எண்ணிக்கை (3, 4)
29. செவ்வகம் ஒன்றை ஆக்கத் தேவையான ஈர்க்குகளின் எண்ணிக்கை (4,6)
30. 200, 400, 600 ஆகிய எண்களை மீதி இன்றி பிரிக்கத்தக்க ஒரு எண் (200,400)

**கீழ்வரும் எண்கோலங்களில் அடுத்துவரவேண்டிய எண்களை எழுதுக.**


31. 5 - 10 - 15 - 20 6 - 12 - 18 - ☐
32. 2 - 4 - 6 - 8 3 - 6 - 9 - ☐
33. 3 ⇔ 2 (6) 4 ⇔ 3 (12) 5 ⇔ 4 ( )
34. 3 → (5) ← 2 5 → (9) ← 4 7 → ( ) ← 6
35. 2 [10] 8 4 [10] 6 7 [10] 3 9 [ ] 1

**வேறுபாடான உருவின் கீழ் கோடிடுக.**


36. 1) 2) 3) 4) 5)




37. 1) 2) 3) 4) 5)




38. 1) 2) 3) 4) 5)



39. 1) 2) 3) 4) 5)



40. 1) 2) 3) 4) 5)



## புலமைப்பரிசில் வினாத்தாள்(01)இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் விபரம்

1. எஸ். டினோஷன் - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
2. எஸ். தயானி
3. பி. கோகுலன் - மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
4. வி. ஆரண்யா - இந்து ஆரம்பப் பாடசாலை
5. ஜெ. கஜந்தன் - இந்து ஆரம்பப் பாடசாலை
6. எஸ். ஜெயரூபன் - இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
7. ரி. கபிலன் - பரியோவான் கல்லூரி
8. ரி. அகர்ஷனன் - இந்து ஆரம்பப் பாடசாலை
9. எஸ். நாறயனி - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
10. ரி. துஷிகா - இணுவில் மத்தியகல்லூரி
11. எஸ். வேனிலன் - இணுவில் மத்தியகல்லூரி
12. ஆர். யதுர்ஷன் - இந்து ஆரம்பப் பாடசாலை
13. கே. கலைவாணி - விவேகானந்த வித்தியாலயம்
14. எஸ். மனோஜிதன் - கொக்குவில் இந்துக் ஆரம்பப் பாடசாலை
15. எஸ். துளசிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
16. எஸ். விஷ்ணுகா - இராமநாதன் கல்லூரி
17. ஆர். துர்க்கா
18. ஆர். சேரன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
19. வி. சிந்துஜா - ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
20. ரி. வைஷ்ணவி - ஆனைக்கோட்டை ம.மி.த.க.பாடசாலை
21. கே. கிருஷ்ணப்பிரகாஷ் - கிளிநொச்சி மகாவித்தியாலயம்
22. ரி. விஜிதன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
23. கே. கஜன் - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்
24. எஸ். தனேஷன் - இந்து தமிழ்கலவன் பாடசாலை
25. ஜெ. பிருந்தன் - புற்றாலை மகாவித்தியாலயம்
26. எஸ். சிவசாந்தன்
27. ஆர். கிருஷ்னேந்திரன் - இந்து ஆரம்பப் பாடசாலை
28. பி. சோபிகா - சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாலயம்
29. கே. கபிலன்
30. கே. ஹர்ஷினி - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
31. எஸ். சயந்திரன் - புனித பத்திரிசியார் கல்லூரி
32. ஆர். அனுஷிதா - இந்து ஆரம்பப் பாடசாலை
33. கே. விந்துஜன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
34. கே. கஜனி - மகாஜனக் கல்லூரி
35. எஸ். அஜந்தன் - தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
36. ஆர். கிருஷாந் - மத்திய கல்லூரி
37. எஸ். கவிஸ்ரா -
38. வி. கிருஷாந்தி - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை

**5ம்தர புலமைப்பரீட்சை வினாத்தாள் - 3**

மாணவர் முழுப்பெயர்..........................................
பாடசாலையின் பெயர் :..........................................
வீட்டின் முகவரி:..........................................
மாணவர்களே உங்கள் விடைகளை 19.02.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி

வலம்புரி, கல்விப்பகுதி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு

## பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்



ரூ. 193,850/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.
அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இலங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

பெப்ரவரி 10ம் திகதியிலிருந்து
மார்ச் 15, 2003 வரை
வழங்கப்படுகின்ற ஒவ்வொரு
பஜாஜ்
முச்சக்கர வண்டியையுடையவர்கள்
பின்வருவனவற்றைப்
பெறத்தகுதியுடையவர்கள்



இலவசம்!

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-26488 பக்ஸ்: 041-27488
நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர் ..................................................

விலாசம் ..................................................

சேவை நிலையம் .............................. தொலை பேசி ..............

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

## இன்னும் ஒரு தகவல்

### உணவின் மகிமை பாரீர்!

மகாபாரத யுத்தம் முடிந்தது. தருமர் சக்கரவர்த்தியானார். பீஷ்மர் யுத்த பூமியில் அம்புப்படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறார். உயிரை விடப் போகிறார். அதற்காக, சூரியன் வடதிசையை அடைகின்ற உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் தருமர் கண்ணனிடம் அனுமதி பெற்று பீஷ்மரைப் பார்ப்பதற்காக குருக்ஷேத்திரத்திற்கு வருகிறார். தம்பிமார்கள், திரௌபதி எல்லாரும் கூட வருகிறார்கள். பீஸ்மரைப் பார்த்து எல்லாரும் வணங்குகிறார்கள்.

யுதிஷ்டிரர் (தருமர்) பீஷ்மரிடம் வர்ணம், ஆசிரமம், மக்கள் கடமை, அரசரின் கடமை போன்ற விஷயங்களைப் பற்றி நிறையக் கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர் ஒவ்வொன்றாகக் கேட்கப் பீஷ்மரும் அது அதற்குத் தகுந்த பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்படி பீஷ்மர் யுதிஷ்டிரருக்குத் தர்மோபதேசம் செய்து கொண்டிருந்த பொழுது திரௌபதிக்குச் சிரிப்பு வந்து விட்டதாம். 'க்ளுக்' என்று அவர் சிரித்துவிட்டார். அந்தச் சத்தத்தைக் கேட்ட பீஷ்மர், தர்மோபதேசத்தைப் பாதியிலே நிறுத்தினார். திரௌபதியைப்பார்த்து 'மகளே! ஏனம்மா சிரித்தாய்?' என்று கேட்டார்.

'பிதாமகரே! ஏதோ தெரியாமல்சிரித்துவிட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்' என்றார் அவர். 'குழந்தாய்! உன்னைப் போன்ற உத்தமப் பெண்கள் காரணமில்லாமல் இப்படிச் சிரிக்க மாட்டார்கள். வெட்கப்படாமல் விஷயத்தைச் சொல்லு!' என்றார் பீஷ்மர். திரௌபதிக்குக் கண்கலங்க ஆரம்பித்து விட்டது. 'சுவாமி! நீங்கள் இப்பொழுது இவ்வளவு தர்மோபதேசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் இதைப்பார்க்கும் பொழுது எனக்குத் திடீர் என்று ஒரு சந்தேகம் வந்தது. அதாவது இன்றைக்குத் தர்மத்துக்கு இவ்வளவு சிறந்த விளக்கத்தைக் கொடுக்கிற இதே பிதாமகர், அன்றைக்கு கௌரவர் சபையிலே துச்சாதனன் என்னை மானபங்கப்படுத்த முயற்சி பண்ணியபொழுது சும்மா வாய் மூடி மௌனமாகப் பார்த்துக்கொண்டுதானே இருந்தார். அந்தச் சமயத்தில் இவ்வளவு ஞானத்தையும எங்கேவிட்டு வைத்திருந்தார்? ஒருவேளை அதன் பின்னர் தான் இந்தத் தர்ம விஷயங்களையெல்லாம் கற்றுக் கொண்டாரா? என்று யோசித்தேன் அதுதான் சிரிப்பு வந்துவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள்' என்றார்.

பிதாமகர் இதற்கு அமைதியாகப் பதில் சொல்ல ஆரம்பித்தார். 'குழந்தாய் உன்னுடைய கேள்வி நியாயமானதுதான். இதிலே உன்னை நான் மன்னிப்பதற்கு என்னம்மா இருக்கிறது? துரியோதனன் சபையில் நான் இருந்தபொழுது எனக்கு அந்த அறிவு இருக்கத்தான் செய்தது. ஆனால்... துஷ்டனான துரியோதனன் உணவை நான் அப்போது சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அதன் காரணமாக என் அறிவு மழுங்கிப்போனது. நல்லது கெட்டதைப் பற்றி ஆலோசிக்க முடியாமல் போய்விட்டது. தீயவர்கள் போடுகிற உணவைச் சாப்பிட்டால், சாப்படுகிறவனின் மனமும், உடலும் கெட்டுப் போய்விடும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன! ஆனால், இப்போது போரில் அர்ஜுனன் என்மீது எய்த அம்புகளாலே என் உடம்பில் இருந்ததெல்லாம் வெளியேறிவிட்டது. கெட்ட உணவைச் சாப்பிட்டதனாலே உண்டான இரத்தம் முழுவதும் இப்போது உடம்பை விட்டுப் போய்விட்டதனாலே என் புத்தி தெளிந்து விட்டது. அதனால்தான் இப்போது இந்த அளவுக்குத் தர்மத்தின் தத்துவங்களைச் சரியாக எடுத்துச் சொல்ல முடிந்தது!' என்றார் பீஷ்மர்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... யார் சாப்பிடக் கூப்பிட்டாலும் உடனே முண்டியடித்துக்கொண்டு போய் முதல் பந்தியில் உட்கார்ந்து விடக்கூடாது! சாப்பிடக் கூப்பிடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்... நல்லவர்களா என்று யோசிக்க வேண்டும். கெட்ட எண்ணத்தோடு போடுகிற சாப்பாடு புத்தியை மழுங்கடித்துவிடும். எத்தனையோ பேர் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறவர்களை விருந்துக்கு அழைத்து... சாப்பிட்டு முடிந்த கையோடு முக்கியமான பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு விட்டுவிடுவார்கள் சார்! முக்கியமாகப் பெரிய பொறுப்பிலுள்ளவர்களை யாராவது சாப்பிடக்கூப்பிட்டால் கொஞ்சம் யோசிக்கவும்! கூப்பிடுபவர்களின் மனதைப் புரிந்து கொண்டு அதன்பின்னர் போவதா? வேண்டாமா என்பதை முடிவு பண்ண வேண்டும். சாப்பாட்டில் அவ்வளவு விஷயம் இருக்கிறது. பீஷ்மருக்கே அந்த நிலைமையென்றால் நாம் எம்மாத்திரம்.

சில சந்தர்ப்பங்களில் 'சாப்பாடு' புத்தியில் ஒருதெளிவை உண்டாக்குவதும் உண்டு. ஒரு ஊருக்கு ஒரு பெரிய மகான் வந்தார். அவர் சாப்பிடுவதே இல்லை. எப்போதாவது கொஞ்சம் தண்ணீர்... பால் அவ்வளவு தான். ருசியையெல்லாம் கடந்தவர். அவரிடம் எல்லோரும் போய் ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

அந்த ஊரில் ஒரு ஹோட்டல். அதன் முதலாளியும் அந்த மகானிடம் ஆசீர்வாதம் வாங்கப் போனார். அவரின் முன் போய்ப் பணிவாக நின்றார். துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, காலில் விழப் போனார். அதற்கு முன்னர் அந்த மகான் எழுந்து இவர் காலில் விழுந்துவிட்டார். ஹோட்டல் முதலாளி பதறிப்போய் 'சுவாமி என்ன இது அபச்சாரம்! நீங்கள் தான் என்னை ஆசீர்வாதம் பண்ண வேண்டும் என்றார். அதற்கு இந்த சாமியார் 'அப்படி இல்லை! நீங்கள் தான் என்னை ஆசீர்வாதம் பண்ண வேண்டும்! ஏனென்றால்... கொஞ்சக்காலத்துக்கு முன்னர் உங்கள் ஹோட்டலில் தான் நான் 'கணக்குவைத்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன்! இன்றைக்கு நான் ருசி களையெல்லாம் வெறுத்து ஞானியாவதற்குக் காரணமே நீங்கள்தான்' என்று சொன்னார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தேர்தல் ஆணைக்குழு நியமனத்தில் தாமதம்

(கோட்டை)

தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களில் ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கீகரிக்க மறுப்பதனால் மேற்படிகுழுநியமனம் பெறுவது தாமதப்படுத்தப் பட்டு வருகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கான பெயர்பட்டியலை அரசியல்சட்ட சபை கடந்த வருடம்சமர்ப்பித்திருந்தது. ஆனால் அப்பட்டியலில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் ஒருவர் தொடர்பாக ஜனாதிபதி சம்மதம் தெரிவிக்க மறுத்துவிட்டதால் இந்த ஆணைக்குழு நியமனம் இன்னமும் எதுவித முன்னேற்றமுமின்றி அப்படியே இருந்து வருகின்றது.

அரசியல் சட்டசபை(C.C) முன்மொழிந்துள்ள உறுப்பினர்களின் பெயர்கள்பின்வருமாறு,

ரஞ்சித் தீரரட்ண(தலைவர்), கலாநிதி ஏ.எம்.ஜி. சந்திரஹாசன், திருமதி எம்.நிலாவீர, எல்மோ.எம். பெரேரா, எஸ்.ஏ.சி.எம் சுஹேல், 17வது அரசியல் சட்டதிருத்தத்துக்கமைய மேற்படி நியமனங்களை ஜனாதிபதி செயல்படுத்தி அவ்வாணைக்குழுவை இயங்கவைக்க வேண்டும்.

இக்குழுவுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள சிலர் தொடர்பாக ஜனாதிபதிக்கு சில ஆட்சேபனை கள் கிடைத்திருப்பதாகவும் அவைகள்பற்றி இன்னமும் ஆராயப் பட்டுவருவதாகவும் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறியுள்ளார்.

ஆணைக்குழுவுக்கான பிரமுகர்களில் குறிப்பிட்ட ஒருவர் பற்றியே அதிருப்தி நிலவுவதாகவும் அவர் ஆளும் கட்சிக்கு சார்பானவர் என்று கருதப்படுவதாகவும் அவர் கூறினார். தீரரட்ணவின் நியமனம் தொடர்பாகவே பிரச்சினை எழுந்துள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி எனைய சிறு கட்சிகளோடும் ஆலோசனைகள் நடத்தி எல்லாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவரை நியமிக்க முடியுமா என்பது பற்றி யோசித்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுச்சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸார் ஆணைக்குழு மற்றும் நிதி ஆணைக்குழு முதலியவை ஏற்கனவே நியமிக்கப் பட்டுவிட்டன.

அதேசமயம் முன்னர் அரசியல் சட்டசபைக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு பின்னர் அதிலிருந்து ராஜினாமா செய்த ஜனாதிபதி வழக்கறிஞர் எச்.எல்.டி.சில்வாவின் ராஜினாமாவை இன்னமும் திருமதி குமாரதுங்கா ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு.சில்வா இப்பொழுது வெளிநாட்டில் இருந்து வருகின்றார்.

ஜனாதிபதியால் அகற்றப்படும் வரை அவர் அரசியல் சட்டசபையில்ஒரு அங்கத்தவராக இருந்து வரவே செய்வார் என்று அச்சபையின் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

ராஜினாமா செய்த பிறகு அவர் அச்சபையின் எந்த ஒரு கூட்டத்திலும் பங்குபற்றாமலே இருந்து வருகிறார். ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும் சபையாக அரசியல் சட்டசபை இருந்து வருகின்றது. அதன் கூட்டங்களில் திரு.சில்வா கலந்து கொள்ளாமையால் அச்சபையில் ஜனாதிபதியின் கருத்துக்கள் பிரதி நிதித்துவம் பெறாமலே இருந்து வருகின்றது.

19வது அரசியல் சட்டத்திருத்தம் சம்பந்தமான வழக்கொன்றில் பொது ஜன ஐக்கிய முன்னணிசார்பில் ஆஜராகி வாதிட்டவர் என்ற வகையில் திரு சில்வாவின் நியமனம் தொடர்பாக அரசாங்கம் ஆட்சேபனை கிளப்பியதின் பேரில் அவர் அந் நியமனத்தை ராஜினாமா செய்திருந்தார். (பி)

# தொண்டர் ஆசிரியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

வடமத்திய, வடமேல் மாகாண தொண்டர் ஆசிரியர்கள் பத்திரமுல்ல கல்வி அமைச்சு அலுவலகத்திற்கு முன்னால் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து அரசு எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 140நாட்களாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் இருந்த இத்தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

மாகாணசபை முதலமைச்சர்களின் கோரிக்கைக்கு அமைய தொண்டர் ஆசிரியர்களுக்கு எத்தகைய நியமனமும் வழங்க வேண்டாம் என ஜனாதிபதி தன்னைப் பணித்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேனா கொடித்துவக்கு அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராசி பலன்

**12.02.2003**
**(தை 29, புதன்)**

| | |
|---|---|
| தசமி | காலை 7.33வரை |
| மிருகசீரிடம் | மு.இ 10.03வரை |
| இராகுகாலம் | 12.34 - 2.04 |
| சுபநேரம் | 5.04 - 6.34 |

**கண்ணப்பநாயனார் குருபூசை**

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, தனவரவு, அன்னியர் உதவி.

**இடபம்**
மனக்கிலேசம், மாதர் உதவி, கௌரவக்குறைவு, காரிய தாமதம்.

**மிதுனம்**
விருந்துபசாரம், வாக்கு மேன்மை, புதியபொருள் சேர்க்கை, நல்லமுயற்சி.

**கடகம்**
உணர்ச்சிவசப்படல், உடல்நலக் குறைவு, சுபசெலவு, அலைச்சல்.

**சிங்கம்**
கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், தொழில்லாபம், கீர்த்தி.

**கன்னி**
தூரதேசச்செய்தி, சுபநிகழ்ச்சி, கடின முயற்சி, பிறர் உதவி.

**துலாம்**
உடல் உழைப்பு, ஆரோக்கியக் குறைவு, மனச்சஞ்சலம், திட்டமிடல்.

**விருச்சிகம்**
வீண்தொல்லை, காரிய தடங்கல், பிரயாணக் கஷ்டம், போசன சுகம்.

**தனுசு**
களஸ்திர சுகம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில்நன்மை, தேகநலன்.

**மகரம்**
திடீர்பயணம், சுகவாழ்வு, காரிய அனுகூலம், சத்துருஜெயம்.

**கும்பம்**
தொழில் முயற்சி, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், உடல்நலக்குறைவு.

**மீனம்**
பயந்த சுபாவம், மாதாசுகம், முயற்சி தாமதம், அற்பர் உ[illegible]வு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# அரசு - புலிகளின் உறுதியை தமிழ்க் கட்சிகள் வரவேற்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் அரசியல் ரீதியிலான சவால்கள் எதிர்ப்பட்டாலும், அவற்றை எதிர்த்து தீர்வொன்றை நோக்கிச் செல்லும் என இருதரப்பினரும் உறுதிபூண்டுள்ளதை தமிழ்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.

பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் தொடர்பாக தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் சிலர் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு,

கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. நெடுந்தீவுச் சம்பவம் போன்ற சில துரதிஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெற்றாலும், பேச்சுவார்த்தை அதன் குறிக்கோளை அடையும் வரை தொடர வேண்டும்.

நிரந்தர சமாதானம் ஒன்றை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கேற்ற வகையில் இருதரப்பினரும் சமாதானப்பேச்சைத் தொடர்ந்து வருவது வரவேற்கத்தக்கது.

நெடுந்தீவுச் சம்பவத்தைப் பாரதூரமான சம்பவமாகப் பெரிதுபடுத்தாமல், இருதரப்பும் தங்களது நிலையான அரசியல்தீர்வை நோக்கிச் செல்வது பாராட்டத்தக்கது என ஈழமக்கள புரட்சிகரவிடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிறேமச்சந்திரனும், தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பல வருடங்களாக நிரந்தர சமாதானம் ஒன்றை எதிர்பார்த்து இருப்பதை அவர்களின் ஏகப்பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், மேற்கூறப்பட்ட விட்டுக்கொடுப்புகள். பெரிதுபடுத்தாமை போன்ற கருத்துக்கள் வரவேற்கக் கூடியது என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் ந.குமரகுருபரனும் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரதேச தமிழ் மக்களைப் போல மலையக தமிழ் மக்களும் நிரந்தர சமாதானத்தை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிர்பாராத சம்பவங்களைத் தவிர்த்து இருதரப்பு பிரதிநிதிகளும பேச்சுவார்த்தையை நகர்த்திச் செல்வது அவர்களது அரசியல் புலமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தி நிற்கிறது என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். (உ-8)

## சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வரும் சிங்கள, மற்றும் முஸ்லிம் மாணவர்கள் தங்களைக் கிழக்கு, மற்றும் தென்பகுதிப பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2002/2003ஆம் கல்வியாண்டில் கல்வி கற்பதற்காக யாழ். பல்கலைக கழகத்துக்கு 30சிங்கள மாணவர்களும், 21முஸ்லிம் மாணவர்களும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இம்மாணவர்களுள் 3பேர் விஞ்ஞானபீடத்தைச்சேர்ந்தவர்கள். ஏனையோர் மருத்துவ பீடத்தைச் சேர்ந்தவர்களாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-8)

# எண்ணங்களை அடைகாத்தவர்களிடம் தான் உண்மைகள் உருவாகி வெளிப்படுகின்றன

ஆழ்ந்த நம்பிக்கை தான் வேண்டு கோளாக, பிரார்த்தனையாக வெளிப் படுகிறது. காரியங்கள் நிகழ்வதில் நம்பிக்கை எவ்வளவு முக்கிய காரண மாயிருக்கிறது என்பதை இப்போது மன நூலார் அறியத்துவங்கியுள் ளனர். எண்ணம் நம்பிக்கையாக வோ விடும் போது அது மந்திரசக்தி பெறுகிறது. எந்த முடிவை நமது நம்பிக்கை எதிர்பார்க்கிறதோ அந்த முடிவைக் கொண்டுவரும் வரை அது சும்மா இருப்பதில்லை.

### ரிக்கன்பேர்க்கர்

பலருடைய வாழ்க்கைச்சம்பவங்கள் இதற்கு எடுத்துக் காட்டாக இருக் கின்றன. இரண்டாம் உலக மகாயுத்த சமயத்தில் கப்டன் ரிக்கன் பேர்க்கரும் அவருடைய எட்டு உதவியாளர்களும் பசுபிக்கடலில் சிறிய படகில் திசை தப்பித்தத்தளித் தனர். சாப்பிட உணவு இல்லை. குடிக் கத் தண்ணீர் இல்லை. வழியோ தெரியவில்லை. அவர்களிடம் இருந் தது சிறியபைபிள் புத்தகம். ஆகவே, அவர்கள் அதை திறந்து, 'தண்ணி ருகரு எங்கே போவேன்?சாப்பிட என்ன செயவேன் என்று கவலைப் படாதே' என்ற மாத்யூவின் வாசகங் களைப் படித்தனர். படித்த ஒரு கண நேரத்தில் ஓர் அதிசயமும் நிகழ்ந்தது. எங்கி ருந்தோ ஒரு கடல் 'புறா கப்டனின் தலை மீதுஅமர்ந்தது. கப்டன் அதை எளிதாகப்பிடித்து அனைவருக்கும் அதை உணவாக வழங்கினார். மீண்டும் அரை மணியில் வானம் கறுத்து இடியுடன் மழை பெய்தது. அவர்கள் குடிக்க நல்ல தண்ணீர் கிடைத்தது. அவர்களுக்கு இப் போது 'தாங்கள் பிழைத்துக் கொள் ளப் போகிறோம் என்ற நம்பிக்கை பிறந்தது. சில நாட்களில் இவர் களின் படகைப் பாதுகாப்பு விமானங் கள் கண்டு பிடித்தன. அவர்கள் காப்பாற்றப் பட்டனர். இந்த ரிக்கன் பேர்க்கரின் சம்பவம் ஒரு நடந்த உண்மைச் சம்பவம். அமெரிக்கா பூரா விலும் ,ரிக்கன் பேர்க்கரோடு உடன் இருந்த மற்ற ஏழு நபர்களின் சாட் சியத்துடன் இச்செய்தி வெளியா கியது. எங்கும் பேசப்பட்டது.

படிப்பதற்கு ஏதோ கதை போல இருக்கும் இச்சம்பவங்களைப் பற்றிப பலர் கண் சிமிட்டுவது உண்டு. ஏனெனில் அவரவர் வாழ்க்கையில் இப்படிப்பட்டதொரு நெருக்கடியும், இக்கட்டும் நேர்ந்து,அதன் விளை வாக அனுபவம் ஏற்பட்டாலொழிய நாம் பிறர் அனுபவங்களை வெறும கதையாகவே எண்ண விரும்பு கிறோம்.

### ஆட்லர் கூறும் கதை

இப்படிப்பட்டவர்களுக்கென்றே மனோதத்துவ நிபுணர் ஆட்லர் ஒரு கதை கூறுவதுண்டு. ஒரு வாளியில் கறந்த பாலில் இரு தவளைகள் தவறி விழுந்தன. ஒரு தவளை எண்ணியது நான் செத்தேன் எப்படி இதிலிருந்து மீளப் போகிறேன்? என்று புலம்பியது. உடனே அதன் கையும், காலும் சக்தி இழந்தன. சற்று நேரத்திற்குள் அது மூழ்கிச் செத்தது.

இரண்டாவது தவளையோ இதிலி ருந்து நான் எப்படியாவது தப்ப வேணடும் என்று எண்ணி, கையையும் காலையும் உதைத்துக் கொண் டது.இப்படி உதைத்துக் கொண் டதில் சற்று நேரத்தில் பால் நன் றாகக கடையப்பட்ட நிலையை அடைந் தது.அதிலிருந்து வெண்ணெய் மிதக் கத் துவங்கியது.சற்று நேரத்தில் அந்தத்தவளை மிதந்த வெண் ணெயின் மீது சௌகர்யமாக உட் காாந்து கொண்டது. எல்லாவற்றுக் கும் நம்பிக்கைதான் காரணம்.நம் பிக்கை திடமாக இருக்கும் போது வழி தானே பிறக்கும்.

குறிக்கோள்களும்-இலட்சியங்களும் மனிதன் பிறந்த உடனேயே அவனு டன் தோன்றிவிடுவதல்ல. ஐந்து வயதில் பள்ளிக்குப் போகும் போதோ பள்ளிப் படிப்பை முடிக்கும் போதோ -திருமணம் செய்து கொள்ளும் போதோ- உருவாவதில்லை. இலட் சியங்களை எந்த வயதிலும் கொள்ளலாம். வயது ஒரு சூழ் நிலைக்கு ஏற்ப மாறும். சில சமயம் வளரும் ஒரு இலட்சியத்தை முன் வைத்து ஒரு தொழிலில் ஒரு துறையில் இறங்கும் போது தான் நமக்குப் புதிய புதிய வழிகள் தோன் றும்.அவ்வப்போது தெரியும் காட்சி களுக்கேற்ப மனிதன் இலட்சியங் களைப் பெரிதுபடுத்திக்கொள்கிறான். மாற்றிக் கொள்கிறான். பஞ்சாயத்து போர்டு தேர்தலில் இறங்கும் போது தான் அடுத்த முறை சட்ட மன்றத் திற்கோ நாடாளுமன்றத்திற்கோ நின்றால் என்ன என்ற எண்ணம் பிறக்கும்.ஒரு சிறு கதை எழுதினால் என்ன என்று தோன்றும்.

### சரித்திர புருஷர்கள்

இலட்சியங்களை அடிக்கடி மாற் றிக் கொண்டே இருப்பவர்கள் எந்த ஊருக்கும் போவதில்லை. அவர் கள் நம்பிக்கை இல்லாதவர்கள், அவசர பிரயாணிகள்.இலட்சியமும் நம்பிக்கையும்கொண்டோரே சரித் திர புருஷர்களாகத் திகழ்கின்றனர். மனித உருவிலோ, நிறத்திலோ, வயதிலோ,படிப்பிலோ ஏதும் இல்லை. மனிதர்கள் அவர்கள கொண்டிருக்கும் எண்ணங்களுக் கேற்ப வாழ்கின்றனர். இலட்சி யங்களுக்கேற்ப உயருகின்றனர்.

ஐ.பி.எம் எனப்படும் அமெரிக்கா வின் கம்ப்யூட்டர் கம்பனியின் தலை வர் வாட்சன் தம் மேஜை மீது' சிந்தி' என்றொரு வாசகத்தை வைத்திருக் கிறார்.மனிதர்கள் சிந்திக்க வேண்டும். இயந்திரங்கள் வேலை செய்ய வேண் டும்என்பது தான் அவர்கள் கம்பனி யின் வாசகம். புதியபுதிய பொருள் களை உற்பத்தி செய்யும் ஒரு டல்லஸ நகரத்துத் தொழில் அதிபரைச் சந் திக்கச் சென்றேன். அவர்மேஜை மீது 'சற்றுக்கனவு காண்' என்ற வாசகம் எனனை நோக்கிக் கொண்டிருந்தது.

நமது ஊரில் சிறிய வயதில் ஒரு மோட்டார் சைக்கிளைக் கண்டு மோகித்த துரைசாமி (ஜி.டி.நாயுடு) நாயுடுவின் மனதிலே ஓடிய எண்ண அலைகளையும் அது நம்பிக்கையாய் ஊறச் செயல்பட்ட வரலாற்றையும் எண் ணிப்பாருங்கள். தானே பத்திரிகை அடித்து அதைத் தெருவில் விற்ற சீனிவாசன் (ஜெமினிவாசன்என்ற இளைஞனின் நம்பிகைகையைக் கொஞ் சம் எண்ணிப்பாருங்கள் .காரைக் குடியி லிருந்த ஒரு நாடகக் கொட்ட கையை சினிமாஸ்ரூடியோவாக்கி அங்கே படம் எடுக்கத் துவங்கிய ஏ.வி. எம்மின் நம்பிக்கையைக் கொஞ் சம் கவனத்தில் கொண்டு வாருங் கள். அவர்களுக்கெல்லாம் வாழ்க் கையில் ஒரு குறிக்கோள் இருந் தது. அந்தக் குறிக்கோளில் அவர் களுக்குஅசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது என்பது புரியும்.

### நோக்கத்தில் தெளிவு வேண்டும்

நமது இலட்சியம் என்ன? ஆசை என்ன? குறிக்கோள் என்ன? என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.எங்கே போக விரும்புகி றோம். எப்போது போய் அடைய விருமபுகிறோம் என்பதில் ஒரு தெளிவு வேண்டும். மனித வளர்ச்சி பற்றி யும்முன்னேற்றம் பற்றியும் பல நூல்கள் எழுதிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.தனி அறையில் உட் கார்ந்து கொள்ளுங்கள். வரிசைக் கிரமமாக உங்கள் இலட்சியங்களை ஒரு தாளில் எழுதுங்கள். அதில் எதுமுக்கியம் எதுமுக்கியமில்லை

டாக்டர்
எம்.எஸ்.உதயமூர்த்தி

என்பதைப் பற்றியோசியுங்கள் நீண்டகாலத்திட்டம், குறுகிய காலத் திடடம் என்ற இலட்சியத்தைப் பகுத் துக் கொள்ளுங்கள்.

எழுதும்போது எண்ணங்கள் தெளி வடைகின்றன. பின் உங்கள் இலட் சியத்தை உங்கள் கண்படும் இடத் தில் வையுங்கள். தினம் அதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தியுங்கள். உங்கள் ஆசையைப் பிரார்த்தனை யாக்குங்கள். அப்போது எண்ணம் புலனறிவு நிலையிலிருந்து ஆழ் மனத்தில் பதியத்துவங்குகிறது. ஆழ் மனத்தில் பதியத்துவங்கிய தும் எண்ணம் நம்மையறியாமல் நம்மைச் செயல்படுத்துகிறது. நம் மைச செயல் படுத்தச் செய்வது மட்டு மல்ல,பற மனிதர்களையும் சம்ப வங்களை நமது இலட்சியத்திற்கு ஏற்பகொண்டு அமைகிறது. நெருக் கடியிலும் ,நோயிலும்,இன்னல் களின்போதும் இந்த நம்பிக்கை தான் மனிதனுக்குவழிகாட்டுகிறது.

நீங்கள் கூறுவது நியாயமாகப் படுகிறது .ஆனால் இதுஎப்படிச் சாத்தி யமாகும்? என்று தன் சந்தேகத்தை எழுப்பினான் சீடன். "பெட்டைக் கோழியைப போய்க்கேள்" என்றார் ஞானி. பெட்டைக் கோழி சொல்லிற்று. 'நான் என்ன கண்டேன்? முட்டை யிட்டவுடன் நான் அதன் மீதுஉட் கார்ந்து அடைகாப்பேன். அவ்வளவு தான் குஞ்சுதானே வெளிவரும். முட்டைக்குள் குஞ்சு எப்படி உருவா கிறது என்ற விஞ்ஞான உண்மை கள் எல்லாம் நான் என்ன கண்டேன். நீவேண்டுமானால் அடைகாத்துப் பாரேன் 'என்றது.' விஞ் ஞான உண்மைகளைத் தெரிந்து கொண்டுதான் அடைகாப் பேன் என்றால் அதற்குள் முட்டைகள் அழுகி விடுமடா முட்டாள்' என்றார் ஞானி.

---

## இலவச கணனிப்பயிற்சி

(வேலணை)

சர்வதேச தமிழ மாணவர் பேரவை யின் ஏற்பாட்டில் வேலணையில் இலவச கணனிப்பயிற்சி ஆரம்பிக்கப் படவுள்ளது.

படித்து விட்டுவீட்டில் இருக்கும் இளைஞர்,யுவதிகள் இப்பயிற்சி நெறியில் பங்கு கொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது.

இப்பகுதி இளைஞர் யுவதிகள் கணனி அறிவைப் பெற யாழ் நகரப் பகுதிக்கு வந்து செல்வது குறிப்பிடத்தக்கது. (உ-47)

## மரம் ஏற்றிச் சென்ற வாகனம் மடக்கிப்பிடிப்பு

(அம்பாறை)

10 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த முதிரை மரங்களை சட்ட விரோதமாக கொண்டு செல்ல முயன்ற இரு வாகனங்களை அம் பாறையில் பொலிஸார் தடுத்து வைத் துள்ளனர்.

இவ் வாகனம் பொத்துவிலில் இருந்து அக்கரைப் பற்று நோக்கி மரங்களை ஏற்றிக்கொண்டு சென்ற போதேபொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப் பட்டுள்ளது. (உ-10)

## நாடற்றவர்கள் 2 இலட்சம் பேருக்கு விரைவில் பிரஜாவுரிமை

(கோட்டை)

வெகு காலமாக நாடற்றவர்கள் எனப் புறக்கணிக்கப்பட்டு வந்த சுமார் 2 இலட்சம் இந்திய வம்சா வழியினரான தமிழ் மக்கள் மார்ச் மாதம் 8ஆம் திகதிக்குமுன்னர் இலங்கை பிரஜாவுரிமை பெற விருக்கின்றனர்.

இந்த மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்ட மூலம் விரை வில் நிறைவேற்றப்படவிருப்பதாக இ.தொ. காங்கிரஸ்எம்.பி ஆ.யோ கராஜ் தெரிவித்துள்ளார்.

தந்தை இலங்கையில் பிறந்து இருந்தால் அவரது பிள்ளைகளுக் கும பிரஜாவுரிமை வழங்கும் சட் டத்தை தாய்மாருக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றை அரசு பாராளுமன்றத்தில் அண்மையில் கொண்டுவந்தது என்றாலும் நாடற்றவர்களையும் இச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுஎதிர் கட்சியின ரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கேட்டுக்கொண்டதால் அச் சட்ட மூலம் இடைநிறுத்தி வைக் கப்பட்டது. இப்பொழுது இவ்விரு அம்சங்களும் இணைக்கப்பட்ட சட்ட மூலம் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்படும்என்று நம்பப்படு கிறது. (பி)

## சமையல் உபகரணங்கள்

(கொழும்புத்துறை)

உரும்பிராய் லயன்ஸ் கழகத் தினால் கடந்த சனியன்று கைதடி முதியோர் இல்லத்திற்கு ஒரு தொகுதி சமையல் உபகரணங்கள் அன்ப ளிப்புச் செய்யப்பட்டன. (உ-5)

---

## அளவெட்டியில் வீழ்ந்த ஆளில்லாவிமானம் உலகில் அதிகூடியநேரம் பறந்த யு. ஏ. வி.ரக விமானம் என்ற பெருமைக்குரியதாம்

(கொழும்பு)

அளவெட்டிப்பகுதியில் அண்மை யில் விழுந்து நொருங்கிய விமானப் படைக்குச் சொந்தமான யு.ஏ.வி.ரக ஆளில்லா உளவு விமானம் உலகில் அதிகூடிய மணித்தியாலங்கள் பறந்த யு.ஏ.வி. ரகவிமானம் என்ற பெருமைக்குரியது என இவ் விமா னத்தை தயாரித்த இஸ்ரேல் கம்பனி தகவல் வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பலாலி விமானப்படைத்தள கட்டளையிடும் அதிகாரி குறூப் கப்டன் கோலித குணதிலகவின் தலைமையில் அமைக்கப்பட்டமூவர் அடங்கிய குழு தனது விசாரணையை முடித்துள்ளது.

விமானம் விபத்துக்குள்ளான தினத் தன்று அப்பகுதியில் கடும் காற்று வீசி இருக்கலாம்.அன்றைய தினம் விமா னம் 30 மைல்களுக்கு மேல் பறந்துள்ளது வானொலி அலை கள்மூலம் கட்டுப்படுத்தப்படும் இவ் விமானத்துக்கு அலைகள் செல்வதில் சடுதியாக தடங்கல்கள் ஏற்பட்ட நிலையில் நிலத்தில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்தில் கணனிமயப்படுத்தப்பட்டிருந்த தன்னியக்க கட்டளைகள் காரண மாக விமானம் தரையில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்தின் மேல் உள்ள வான் பகுதிக்கு தானாக வந்து சுற்றிய வண்ணம் இருந்துள் ளது.

15 வோல்ட் மின்சாரக்கோளாறு உள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டி ருந்த நிலையில் அதை நிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. ஆனால் அதற்கான உதிரிப்பாகங்கள் இருக்கவில்லை. வேறு முறையில் இந்தக்கோளாறை சரிசெய்ய முயற்சித்துக் கொண் டிருந்த நிலையில் 20 நிமிடங்கள் சென்ற பிறகு விமானம் கட்டுப் பாட்டு நிலையத்திலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் விழுந்துள்ளது.

இவ்வகையான விமானங்கள் எரிபொருள் முடியும் வரை பறந்து கொண்டிருக்கும் இக் காலப் பகுதி யில் தரையிலுள்ள கட்டுப்பாட்டு கோபுரத்தில் தவறுகள் ஏற்பட்டிருந் தால் அது திருத்தப்பட்டிருக்க வேண்டும்.நான்கு மணித்தியா லங்கள் வானில் பறப்பதற்கு எரி பொருள் நிரப்பப்பட்டிருந்தும் கூட திரும்பி வந்ததற்கான காரணங் களை கண்டு பிடிப்பதற்கு பலாலி யிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி கள் நடவடிக்கை எடுத்து வருகின் றனர்

இதேவேளை,இவ் விமானம் இலங்கையில் 970 மணித்தியால ங்கள் பறந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கிராம அபி. சங்க நிர்வாகிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களத் தின் அனுசரணையுடன் பச்சிலைப் பளளி பிரதேச செயலகத்தினால் அண் மையில் கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளுக்கு தலைமைத்துவ பயிற்சி நெறி நடாத்தப்பட்டது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகா மணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் கலந்து கொண் டார்.

கிராம அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் க. சீவரத்தினம் உட்படதுறை சார்ந்த அதிகாரிகள் பலர் விரிவுரைகளை நிகழ்த்தினர். (உ)

## இரண்டு ஆண்டுகளில் எயிட்ஸினால் பாதிக்கப்பட்ட 13 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் 7 ஆயிரத்து 200 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக் காகி இருப்பதாக எயிட்ஸ்எதிர்ப்பு இயக் கம் வெளியிட்ட தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவர்களில் 134 பேர் எயிட்ஸ் நோயாளிகளாக இனம் காணப் பட்டுள்ளனர்.

2002ஆம்ஆண்டில் மூவர் உட்பட கடந்த இரண்டு வருடங்களில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த 13 பேர் இறந்துள்ளனர் என்று எயிட்ஸ் எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ,இந்நோயைக் கட்டுப் படுத்தும் வகையில் நாடு தழுவிய ரீதியில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத் தரங்குகளை இவ் இயக்கம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## படித்துவிட்டு வேலையற்றிருப்பவர்களில் 81 வீதமானோர் பட்டதாரிகள்

(கொழும்பு)

தற்சமயம் வேலை வாய்பபற்று இருப்பவர்களில் 81 சதவீதமானவர்கள் பட்டதாரிகள் என மூன்றாம்நிலைக்கல்வி அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தப்பட்டதாரிகள் அனைவரும நாட்டின் பல்கலைக்கழகங்களில் இருந்து கடந்த 7 ஆண்டுகளில் வெளி யேறியவர்கள்.

கடந்த வருடம் ஜுலை மாதம் வரை 26 ஆயிரம் பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி இருந்துள் ளனர்.

இவர்களில் 37 சதவீதமானவர்கள் பெண்களாவர். (உ-8)

# இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலவ எந்த விதமான உதவியாயினும் வழங்கத்தயார்

## யாழ் வந்த பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி றெனோல்ட் முஸோலிம் உறுதி

(தென்மராட்சி)

**இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலவவும் இலங்கைக்கும் பிரான்சுக்குமிடையிலான உறவுகள் மேன்மேலும் வளர்ச்சி அடையவும் அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு பிரான்ஸ் எப்போதும் தயாராகவுள்ளது.**

என பிரான்ஸ் பிரதி வெளி விவகார அமைச்சர் கலாநிதி றெனோல்ட் முஸோலியர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நூல்கள் அன்பளிப்பு செய்த சமயம் குறிப்பிட்டார்.

பிரதி வெளி விவகார அமைச்சர் யாழ்ப்பாணம் பொது நூலகத்தக்கு 800 நூல்களை யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையனிடமும், சபை உறுப்பினர் த.சுபத்திரனிடமும் கையளித்தார்.

மாநகரசபை ஆணையாளா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரான்சு தூதுவர் செல்வி மாரிபிரான்ஸ் பக்னியர், புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, யாழ் மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன் ,வட பகுதிக்கான இராணுவ தளபதி லெப்.கேணல் சரத் பொன்சேகா, புனர்வாழ்வு அமைச்சின் பிரத்தியேக செயலாளர் எஸ்.குமாரதாசன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

பிரதி .வெளி விவகார அமைச்சா கலாநிதி றெனோல்ட் முஸோலியர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது,

பிரான்ஸ்சு தேசம் சமாதானம், கலாசாரம் கல்வி சார் துறைகளின மூலம் எமது எதிர்காலத்தை நோக்குகின்றது. எமக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களையும் நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.எழுத்தில் வடிவமைக்கப்பட்ட கலாசாரத்தினை பிரான்சு மிகவும் பெறுமதி மிக்கதாகக் கருதி வருகின்றது. நெருக்கடி நிலைமைகளில் நாம் இணைந்து எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இன்று கையளிக்கப்பட்ட நூல்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவைகளாகும் இவற்றின் மூலம் யாழ்ப்பாண மக்கள் தமது அறிவுகளை மேம்பாட்டையச் செய்ய வேண்டும். கலாசாரப் பரிவர்த்தனைகள் மூலம் சமாதானத்தை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார்.

புனர் வாழ்வு புனரமைப்பு மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அங்கு உரையாற்றும் போது,

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட பிரான்ஸ் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என பிரதி வெளி விவகார அமைச்சர் கலாநிதி றெனோல்ட் முஸோலியர் குறிப்பிட்டமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். பிரான்ஸ் இலங்கைக்குப் பல்வேறு வழிகளில் ஆதரித்து வருகிறது, மிகவும் இறுக்கமானதும நெருக்கமானதுமான உறவுகள் இருந்து வந்துள்ளன.

இலங்கை மக்கள் பிரான்சின் தார்மீக ஆதரவையும் ஒத்தழைப்பையும் மிகவும் வேண்டி நிற்கின்றனர். எரிக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தினை எதிர் வரும் 14 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதற்கு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபைக்கும், யாழ்ப்பாண மக்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்து உதவிகளையும் வழங்கியுள்ளார். தொடர்ந்தும் வழங்குவார்.

இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தீர்வு விரைவில் கிட்ட வேண்டும் வடக்கையும் கிழக்கையும் புனரமைப்புச் செய்ய நாம் அனைத்து நடவடிக் கைகளையும் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

யாழ்.மாநகர முதல்வர் எஸ். கந்தையன் அங்கு உரையாற்றுகையில், எரிக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தினை திட்டமிட்டபடி எதிர்வரும் 14ஆம் திகதி நாம் திறந்து வைக்கவுள்ளோம். நான் எந்த வித மிரட்டலுக்கும் ஆளாகப்போவதில்லை இன்றைய தினம் எமது நூலகத்திற்கு பிரான்ஸ் நாடு 800 நூல்களை அன்பளிப்புச் செய்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நூலகத்தின் மேலதிக பணிகளுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 21 மில்லியன் ரூபா இவ்வருடம் கிடைக்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் எமது மக்கள் தமது சுய நிர்ணய உரிமைகளை முறைப்படி பெற்ற வாழச் செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும் என்றார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சரும், குழுவினரும், புனரமைககப்பட்டுள்ள யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் செய்து புனரமைக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டார்.

அத்துடன் மாநகர முதல்வர் சபை உறுப்பினர்கள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோர் வேண்டிய விபரங்களையும விளக்கங்களையும் அளித்தனர்.

இதன் பின்னர் பிரதி வெளிவிவகார அமைச்சர் யாழ். அரசினர் போதனா வைத்திய சாலைக்கு விஜயம் செய்து வைத்திய சாலையின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகனுடனும் ஏனைய அதிகாரிகளுடனும் உரையாடினார்.

வைத்தியசாலையில் நிலவும் கட்டில் தட்டுப்பாடு காரணமாக நிலத்தில் இருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளைப் பார்வையிட்ட சமயம் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார்.

அதேவேளை, பணிப்பாளரினால் 190 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டவரைவு ஒன்று பிரான்சு அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மற்றும் குழுவினருடன அல்லைப்பிட்டிக்கும் விஜயம் செய்து அங்கு பிரான்ஸ் நிதி உதவியுடன் அமைக்கப்படும் வீட்டுத்திட்டத்திற்கான அடிக் கல்லை நாட்டி வைத்தார்.

(உ-4,43,77,51)

## வள்ளங்கள் பதிவு

(கொழும்பு)

சகல மீன்பிடி வள்ளங்களையும் பதிவு' செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன் பிடி சமுத்திர வள அமைச்சர் மகிந்த விஜய சேகர தெரிவித்துள்ளார். இவ்வாறு பதிவு செய்யபடுவதன் மூலம் குற்றமிழைப்போரை கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்க ஏதுவாக அமையும் என நம்பப்படுகிறது. (உ-10)

### நூலகத் திறப்பு...

இறுதியில் திறப்பு விழாவன்று யாழ் பொது நூலகம் முன்பாக மாபெரும் மறியல் போராட்டம் நடத்துவதுதெனவும் யாழ்குடாவெங்குமிருந்து அலைஅலையென மக்கள் திரண்டு வர ஏற்பாடுகள் செய்வதெனவும் அன்றைய தினம் யாழ் மாநகரவர்த்தக நிறுவனங்கள் அரச, கூட்டுறவு அலுவலகங்கள் பூரண கதவடைப்பு செய்வதெனவும தீர்மானிக்கப்பட்டது.

பொது நூலகத்தின் கட்டுமானப பணிகள் பூரணப்படுத்தாமல், ஏனைய வளங்கள் உபகரணங்கள் ,நிறைவான புத்தகங்கள் முற்று முழுதாக கிடைக்காத நிலையில் கட்டமானப்பணிகள் முடிக்கப்பட்டு நூலகத்தினை, முறைப்படி கட்டிடதிணைக்களம் மாநகர சபையிடம் கையளிக்காத நிலையில் இந் நூலகத்தினை திறப்பது பொருத்தமற்ற செயலென பல்வேறு பொது அமைப்புக்கள், கல்வி சார் அமைப்புக்கள் மாநகர முதல்வரிடம் வேண்டுகோள் விடுதி திருந்தன. நூலகக் குழுவினர் கூட இத்திறப்பு விழாவை நிறுத்துமாறு கோரியிருந்தனர்.

ஆனால் மாநகர முதல்வரும் அதனுடன் தொடர்புடையவர்களும் தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது நூலகத்தை திறந்து வைக்க முயற்சிக்கின்றனர் இதனை அனுமதிக்க முடியாது என்பதை வெளிக் கோணரவே மேற்படி மறியல் போராட்டம் நடைபெறுகிறதுஎன்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந)

# மீளக்குடியமரும் மக்களின் பாதுகாப்பு சட்டரீதியாக உறுதி செய்யப்பட வேண்டும்

## யு.என்.எச்.சி.ஆர்.இலங்கை வதிவிடப் பிரதிநிதி

(கொழும்பு)

கடந்த கால யுத்தங்களின் போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தவதற்கு சட்ட ரீதியான பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும்.

நேற்று முன் தினம் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் நடைபெற்ற உள்நாட்டில் இடம் பெயர்ந்த தோருடைய காணி மற்றம் சொத்து உரிமைகள் தொடர்பாக ஆராயும் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய யூ.என். எச். சி.ஆர். நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் ரைட் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதையாரும் தடுக்க முடியாது.

ஆயினும்,அவர்கள் மீளக்குடியமரும் போது அவர்களது உயிருக்கும் சொத்துக்களுக்கும் பௌதிக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் பாதுகாப்பு உறுதிப்படுத்த பட வேண்டும்

இந் நிலையில் இடம்பெயர்ந்தவர்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது சமாதான முன்னெடுப்புக்கள் தொடருகின்ற நிலையில் முக்கிய விடயமாகின்றது.

எனினும் சமாதான முயற்சியின் குறிக்கோளாக மீளக் குடியமர்தலை கருதக்கூடாது.

சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் அதற்கு இவ்விடயம் தடையாக இருக்கக் கூடாது.

அதே சமயம்,இடம்பெயர்ந்தவாகளில் பலர் விவசாயத்திலும் மீன்பிடித்தொழிலும் ஈடுபட்டு வருவதால் அவர்களின் தொழிலிற்கும் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

இந்நிலை ஏற்பட்டாலே மீளக் குடியேற்றம் முழுமையாக சாத்தியமாகக் கூடியதாக இருக்கும் என்றார். (உ-10)

# அமைச்சர் ராஜகருணா 7ம் திகதி பதவியேற்பு

(கொழும்பு)

பேராபத்துக்களை முகாமைத்துவம் செய்யும் அமைச்சராக சரத் சந்திரா ராஜகருணா கடந்த 7ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்

இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். கடந்த மாதம் 14ம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற 7 அமைச்சர்களுக்கான சத்தியப் பிரமாண வைபவத்தில் 6 அமைச்சர்களே சத்திய பிரமாணம செய்து கொண்டனர் அப்போது பேராபத்துக்கான முகாமைத்துவம செய்யும் அமைச்சரான சரத் சந்திரா ராஜகருணா வெளி நாட்டில் தங்கியிருந்தமையினால் அந்நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது(க-10)

# ஆலயங்களில் பூசை நடத்த அனுமதி பெற்றுத் தருக!

## *அமைச்சர் மகேஸ்வரனிடம் கோரிக்கை*

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்துப் பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள இரு சைவ ஆலயங்களில் நித்திய பூசைகளை ஆரம்பிக்க உதவுமாறு அப்பகுதி மக்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் துறைமுகம் பகுதியில் அமைந்துள்ள தெருவடிப் பிள்ளையார் கோவில், நாச்சிமார் கோவில் ஆகிய இரண்டிலுமே நித்திய பூசை வழிபாடு ஆரம்பிக்க உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.15 வருடங்களுக்கு மேலாக இவ்விரு ஆலயங்களும் பூசை வழிபாடு இன்றி பூட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (உ-246)

# இலங்கை அரசு-புலிகள் பேச்சின் மூலம் சுமுகமான தீர்வு விரைவில் கிட்டும்

## இந்தியப் பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசிற்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சவார்த்தைகளின் பயனாக சுமுகமான தீர்வு ஒன்று விரைவில் எட்டப்படும் என தாம் எதிர்பார்ப்பதாக இந்தியா பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்களுக்கான மாநாட்டில் கலந்த கொண்டு பேசுகையிலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

இந் நிலையில் இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைதியை நாட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் நடத்தி வரும் பேச்சு வார்த்தை முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

எனவே, இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற வருகின்ற பேச்சு வார்த்தை வெற்றியடைவ்துடன் சமுகமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலை விரைவில் உருவாகி அரசின் நலத்திட்டங்கள் மக்களை போய்ச சேர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்று குறிப்பிட்டார்.



தீவிர வாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதையே கொள்கையாக கொண்டுள்ள பாகிஸ்தான் இலங்கையைப் போன்று இந்தியாவுடன் சுமுக உறவைபேண ஆர்வம் காட்டாது இருப்பதையும் வாஜ்பாய் அங்கு சுட்டிக்காட்டினார் (உ-10)

பருகுவார்போலிலும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது
— குறள் —

வலம்புரி

## தளபதிகள் வருகை

இந்தியாவின் விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல கிருஷ்ணசாமி இன்று கொழும்புக்கு வருகைதரவுள்ளார். அவரின் வருகை விமானப் படைத்தளபதி ஏயார் மார்ஷல் ஜலத் வீரக்கொடியின் அழைப்பின் பேரில் இடம் பெறுகிறது. அவரின் வருகை குறித்து தெளிவான விளக்கங்கள் குறிப்பிடப்படாவிட்டாலும் அவரின் வருகைக்கும இராணுவப்பாதுகாப்புக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பது மட்டும் உண்மை.

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் வருகைக்குப் பின்னர் இந்தியா விமானப் படைத்தளபதி கொழும்புக்கு வருவது பெரியதொரு இராணுவத் தந்திரம் உண்டெனபது மறுக்க முடியாத உண்மை .

அரசுக்கும்,விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறும் சமாதான முயற்சிகள் இந்தியாவின் இறைமைக்கு குந்தகமானது என பொது ஜன ஐக்கிய முன்னணியின் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று இநதியத்தலைவர்களிடம் எடுத்துக்கூறியதை அடுத்தே இந்தியத் தளபதிகளின் இலங்கை வருகை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்ற காழ்ப்புணர்வு இந்தியாவிடம் இருக்கவே செய்தது. அதன் பின்னணியில் இலங்கையில் இனவிவகாரத்தில தொடர்ந்தும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினால அண்டை நாடான தனக்கு பாதகமாகிவிடும் என்ற நிலையில் தற்போது இந்தியா இலங்கையின் விவகாரத்தில தலையிடத் தொடங்கியுள்ளது. அதன் ஒரு கட்டமே இந்தியா முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் இலங்கை வருகையாகும்.

அது மட்டுமன்றி நெடுந்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் படகு ஆயுதத்தோடு நடமாடுகிறதென்ற தகவல்களையும் இந்திய கடற்படையே இலங்கை கடற்படைக்கு தெரிவித்திருந்ததென்ற செய்தியும் உண்டு.அதாவது,இலங்கையின் பாதுகாப்புக்கும்,இறைமைக்கும் இந்தியா கடற்படையின் துணை அவசியம் என்ற நிலைப்பாடு நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. அதனை மேலும் உறுதிப்படுத்துவதாகவும் இந்தியாவை விட்டு விலகுவது இலங்கைக்கு ஆபத்தானது என்ற யாதார்த்தத்தை மீளவும் வலியுறுத்தும் வகையிலும் நெடுந்தீவுக்கடலில புலிகளின் படகு நடமாட்டம் பற்றிய தகவல் இந்தியக் கடற்படையால் இலங்கை கடற்படைக்கு தெரிவிக்கப்பட்டது.அதன் அடுத்த கட்டமே இன்று கொழும்புக்கு வரும் இந்திய விமானப்படைத் தளபதியின் விஜயமாகும்.

இவற்றின் ஒட்டு மொத்த விளைவு இலங்கையின் இனவிவகாரத்தில் இந்தியா தனது பிடியை இறுக்குவதே யாகும்.

# பேரழிவு ஆயுதங்களை எதிர்கொள்வது எப்படி? அறிவூட்டல் கருத்தரங்கு 5 தினங்கள் கொழும்பில்

(கொழும்பு)

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு தாக்குப்பிடிப்பது எவ்வாறு என்னும் விடயம் தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில்' ஆரம்பமானது.

5 தினங்கள் இடம்பெறவுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அறிவூட்டல் கருத்தரங்கை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு நடத்துகின்றது.

பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 150 அதிகாரிகள் பங்குபற்றும் இக்கருத்தரங்கில் இரசாயன, 'உயிரியல், கதிர்வீச்சு ஆயுதங்கள் மூலமான பயங்கரவாதத் தாக்குதல்களின் போது எவ்வாறு பாதுகாப்புத் தேடிக் கொள்வது, என்னென்ன முறைகளைக் கையாளுவது, அவற்றைச் சமாளிப்பதற்கு என்னென்ன திறன்கள் தேவைப்படும், மருத்துவ நடைமுறைகள் போன்றவை பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதுடன் பயிற்சி முறைகளும் செய்து காட்டப்படவுள்ளன.

பொலிஸ், படைத்துறை, அவசர சேவை, மாநகர சபை அவசர உதவி, செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 150 அதிகாரிகளும் இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றனர்.

கருத்தரங்கைத் தொடக்கிவைத்து அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் பேசுகையில்,

பேரழிவு ஆயுதங்களால் இலங்கைக்கு ஆபத்து வரும் என்ற எதிர்பார்ப்பில் இது நடத்தப்படவில்லை.

ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இதனை நட்பு நாடென்ற வகையில் ஏற்பாடு செய்தோம் என்றார்.

அரசாங்கத்தின் சார்பில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தொடக்க நாளன்று கருத்துரை வழங்கினர் (உ)

## முஸ்லிம் நாட்டு தூதுவர்களை அனுரா சந்திப்பார்

(கொழும்பு)



மத்திய கிழக்கு நாடுகளினதும் ஏனைய முஸ்லிம் நாடுகளினதும் இலங்கைக்கான தூதுவர்களை பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா இவ்வார இறுதியில் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் வேண்டுகோளின் பேரிலேயே இலங்கைக்கான மேற்படி தூதுவர்களை சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் எழுந்துள்ள போர் அபாயம் குறித்தும் இதனால் பிராந்திய நாடுகளிடையே ஏற்படக்கூடிய யுத்த அபாயம் குறித்தும் தூதுவர்களுடன் அனுரா கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், அனுரா பண்டாரநாயக்கா ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்களையும் சந்திக்கவுள்ளார். (உ-8)

## சமாதான முயற்சிகளில் இணைகிறது பிரான்ஸ்

### வெளியுறவு அமைச்சர் பச்சைக் கொடி

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் பிரான்ஸ் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவிருக்கின்றது என்று திங்களன்று ஜனாதிபதி குமாரதுங்கவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த பின்னர் பிரான்சின் வெளியுறவு அமைச்சர் றெனோல்ட் முசோலியர் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வந்துள்ள பிரான்சின் வெளியுறவு அமைச்சர் றெனோல்ட் முசோலியர் மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்ட புனர்வாழ்வு முயற்சிகளில் பிரான்ஸ் தனது ஆதரவை வழங்கும்.

ஆனால் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு விடயங்களை சிக்கல்படுத்தும் நோக்கம் பிரான்சுக்கு கிடையாது.

வடக்கு-கிழக்கின் புனர்வாழ்வுக்கு ஏற்கனவே இருபது மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

பலமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்துவதே பிரான்சின் திட்டம். இலங்கையின் சுற்றுலாத் துறை, துறைமுகங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் அபிவிருத்தி முயற்சிகளுக்கு பிரான்ஸ் உதவும் என்று குறிப்பிட்டார். (உ)

## பிரித்தானிய நிறுவனத்துக்கு அரசாங்கம் அவகாசம்

(கொழும்பு)

ஆறு பஸ் கொம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்த பிரித்தானிய நிறுவனம் செலுத்த வேண்டிய இறுதி நிலுவைப். பணத்துக்கான காலக் கெடுவை அரசு விதித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் இறுதி நிலுவைப் பணத்தை செலுத்தாவிடின் மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும என போக்குவரத்துத்துறை அமைச்சர் உபாலிபிஜசோம தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினத்துக்குள் நிலுவைப் பணத்தை செலுத்தாவிடின் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும் எனவும்,

பிரித்தானிய நிறுவனத்துக்கு நிலுவைப்பணத்தை செலுத்துவதற்கான கபல அவகாசம் ஏற்கனவே ஒரு தடவை வழங்கப்பட்டதால் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## கப்டன் பொதிகைத்தேவனின் நினைவுக்கல் திரை நீக்கம்

(நெல்லியடி)

நெடுந்தீவுக் கடலில் வீரகாவியமான கடற்புலி கப்டன் பொதிகைத்தேவனின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்தினம் வடமராட்சியில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

பொதிகைத்தேவனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நேற்று முன்தினம் நண்பகல் அவரது வீட்டிலிருந்து ஊர்வலமாக பிரதான வீதி வழியாக நெல்லியடி, பருத்தித்துறை, இன்பருட்டிப் பகுதிகளினூடாக எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சென்றடைந்தது.

நெல்லியடியில் நடைபெற்ற வீரவணக்க அஞ்சலிக் கூட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர், போராளிகள் உட்பட பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற வீரவணக்க அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

மாவீரர் பொதிகைத் தேவனின் நினைவுக்கல் பி.ப. 6.30 மணியளவில் எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டது. (த-44)

## மீட்புநிதி கடனை மீளப்பெற மீண்டுமோர் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக் கடனை மீளளிப்பதற்காக 1990 ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டு வரை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை தமது கடனை மீளப் பெறாதோர் அதனை மீளப் பெறுவதற்கு மீண்டுமோர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

14.02.2003
வருவாய்ப் பகுதிச் செயலகம் - புளியங்குளம்- காலை 10.00- மு.ப 10.30 மணி
மத்திய கல்லூரி -கிளிநொச்சி பி.ப. 3.00 - பி.ப 4.00 மணி

15.02.2003
வேம்பொடுகேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை -பளை காலை 9.00 -நண்பகல் 12.00 மணி

மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் மீட்பு நிதியை மீளப் பெற்லாம் என நிதிப் பொறுப் பாளர் யோ.தமிழ்குமரன் அறிவித்துள்ளார். (உ)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். சுகவாழ்வு நிலையப்பணிப்பாளர் வணபிதா எஸ்.டேமியன் கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் இ.இராசசேகரம் மற்றும் கு.தியாகராஜகுருக்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-10)

## தினசரி தியானம்

### இயற்கை விதி

ஒருவன் எப்பொருளைக் குறித்து ஆசைப்படுகிறானோ அப்பொருள் இருக்கும் இடத்திற்கு அவன் தானாகவே இழுத்துச் செல்லப்படுகின்றான். அவன் ஆசையைப் பூர்த்தி செய்து வைப்பதற்கும் அவன் முன்னேற்றத்திற்கும் தகுந்த சூழ்நிலையை ஆண்டவன் ஏற்படுத்துகின்றான். இதுவே இயற்கையின் பெரிய விதியாகும்.

உன் வாழ்வும் நீ செய்யும் காரியங்களும் இவ்விதிக்கு உட்பட்டே இருக்கின்றன. நீ இதைச் சரியாக அறிந்து கொள்ள முடியுமானால் இவ்விதியே உனக்கு அனுசரணையாக இருக்கும். இவ்விதியின் நிபந்தனைகளைப் பின்பற்றினால் உனக்கு எக்காரியத்திலும் வெற்றி.

சுவாமி சிவானந்தர்

## பண்ணிசைப் போட்டி பரிசளிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபையினரால் அண்மையில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

### கீழ்ப்பிரிவு

**முதலாம் இடம:** வி.வைஷ்ணவி-யா/யாழ்ப்பாணக் கல்லூரி
**இரண்டாம் இடம்:** ர.சத்தியவாகிஸ்பரன்-யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்
**மூன்றாம் இடம:** செ.பிரவீனா-யா/இந்து ஆரம்பப் பாடசாலை

### மத்திய பிரிவு

**முதலாம் இடம:** தே.விதுர்சன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
**இரண்டாம் இடம்:** சி.தர்சிகா-யா/விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி
**மூன்றாம் இடம:** கே.கோபிகா-யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

### மேற்பிரிவு

**முதலாம் இடம:** து.துஷ்யந்தினி - யா/இராமநாதன் கல்லூரி
**இரண்டாம் இடம்:** சி.சர்மிளா - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
**மூன்றாம் இடம:** ச.கேதாரா -யா/வட்டு இந்துக். கல்லூரி

இன்று நடைபெறவுள்ள புண்ணிய நாச்சியம்மையார் தினத்தில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (உ)



யாழ்.வந்த பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் யாழ்.மாநகர முதல்வரைச் சந்தித்தபோது..

### ஜனாதிபதியின்...

இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் புலிகள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் சட்டப்படியே நடத்தப்பட்டனர் வெள்ளியன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை நடைமுறைப்படுத்தவே முயன்றனர். இவ்வாறு அந்த வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை ஆயுதங்களுடன் கைது செய்யப்படும் புலிகளிடம் இருந்து எழுத்து மூல உத்தரவாதம் பெறப்பட்ட பின் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் உத்தரவு பெப்ரவரி 7ம் திகதி நடை பெற்ற சம்பவத்திற்கு மட்டுமே பொருத்தமானது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (த)

### மிருசுவில்...

உள்நோக்கம் தனிப்பட்ட விடயமாகும் இராணுவத் பொலிஸார் தலையிட்டிருக்காவிடில் இச்சம்பவம் வெளிப்பட்டிருக்காது வழக்கில் 55பேர் சாட்சிகளாக உள்ளனர் 35தடயப பொருட்கள் விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.இவ்வாறு சட்டதத்தரணி சரத் ஜெயமன்ன தெரிவித்தார். (த)

## கனடா அணி வெற்றி

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியில் கனடாஅணிக்கும,பங்களாதேஷ் அணிக்குமிடையே நேற்று நடை பெற்ற போட்டியில் கனடா அணி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கனடா அணி 49.1 ஓவர்கள் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 181ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுபபெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ்அணி 28 ஓவர்களின் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

## பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்ட,18 வயதுக்கு குறைந்த நான்கு சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்மாவட் அரசியல் துறை அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்ற இந்த நிகழ்வில்,யாழ்ப்பாணம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு,யாழ்.மனிதவுரிமை ஆணைக் குழு,யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்அரசியல் துறையைச்சேர்ந்த சு.ப பிரவின்ராஜ் சிறுவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார். இம்மாதம் 7 பேர்இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த-7)

### ஜனாதிபதி...

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறார். வெளிநாடடுத் தலைவர்கள் முன்னிலையில் ஒரு கருத்தையும் உளளூரில் மற்றும் ஒரு நிலைப்பாட்டையும் கொண்டுள்ளார். இது வருந்தத்தக்க செயலாகும்,

நாட்டின் நன்மை கருதி அரசியல் இலாபத்தை நோக்காது சமாதான முயற்சிக்கு ஜனாதிபதியும் எதிர்க் கட்சியும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## மண்டைதீவில் தென்னம் நாற்றுகள் இன்று வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மண்டை தீவுப் பகுதி விவசாயிகளுக்கு யாழ்.பல்கலைக் கழக விவசாய பீடத்தின் தகவல் தொடர்பு மையத்தினால் இன்று புதன்கிழமை 300 தென்னம் நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

மண்டைதீவு கிராம அலுவலர் மரியதாஸ் தலைமையில் இந் நிகழ்வு நடை பெறும்.தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதற்கான தென்னம் நாற்றுக்களை இலவசமாக வழங்கியுள்ளது.

இதேவேளை தகவல் தொடர்பு மையத்தினர் அண்மையில் மண்டை தீவுக்கு விஜயம் செய்து அங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தனர். (த)

## கும்பாபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டப பிளளையார் ஆலய கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

கோப்பாய பகுதி ஆலயங்களின சிவாச்சாரியர்கள் கும்பாபிஷேகக கிரியைகளை நடத்தவுள்ளனர். (ந-79)

### ஜப்பான்...

உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம இலங்கைக்கு விஜயம் மேற் கொணடிருந்த யசுசி அகாசி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் அரச தரப்பு பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதுடன் யாழ்.மாவட்டத்திற்கும் விஜயம் செய்திருந்ததும் குறிபிடத்தக்கது.

இலங்கையின் சமாதான முயற் சிகளுக்கு உதவும் திட்டப் பிரதிநிதியாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் திகதி ஜப்பான் அரசின் பிரதிநிதியாக யசுசி அகாசி நியமிக்கப்பட்டார்.

இதேவேளை இவர் 13ம் திகதி தமிழ்க் கூட்டமைப்பை சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. (உ-8)

### மூன்று புலிகள்...

தொடர்பாக ஆராயப்பட்டமை முக்கியம் வாய்ந்தது.இவ் விடயங்கள் யாவும் வெறும் பேச்சளவில் மாத்திரம் நின்றுவிடக் கூடாது.

விடுதலைப் புலிகளின் முகாம்களில் உள்ள சிறுவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக யுனிசெவ் அல்லது ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் அங்கு செல்லவேண்டும். அங்கு அவர்கள் முகாமிட்டு இருந்து இச் சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 6ம் திகதி நெடுந்தீவுக் கடல் பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக்மாராப்பனவுடனும், கடற்படைத் தளபதியுடனும் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதுடன்,சில உத்தரவுகளையும் பிறப்பித்திருந்தார் ஆனால் அவின் உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சர் செவிமடுக்காமல் உதாசீனம் செய்துள்ளார். இதனால் மூன்று உயிர்கள் அநாவசியமாக தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது இதற்குப் பாதுகாப்பு அமைச்சரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இந் நிலையில் இனி வரும் காலத்தில் ஜனாதிபதியின் உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சர் உதாசீனம் செய்வாராக இருந்தால் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சரை எச்சரித்துள்ளார்.

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிகையை ஆரோக்கியமான முறையில் நடை முறைப்படுத்த வேண்டும் அப்படிச் செய்யத் தவறின் அது சமாதான முயற்சிகளை வெகுவாகப் பாதிக்கும் என ஜனாதிபதி கருதுகிறார் என்றும் ஹரீம் பீரிஸ் பாதுகாப்பு அமைச்சருக்கு ஜனாதிபதி விடுத்த உத்தரவை அரச செய்தி ஊடகம் ஒன்று திரிபுபடுத்திக் கூறியுள்ளமைக்கு பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளார்.(ம)


## மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் தை மாதம் 29ம் நாள் 12.02.2003புதன் கிழமை பகல் 9.46 மணி தொடக்கம் 11.06மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் பாலஸ்தான கும்பாபிஷேகம் சிவாச்சார்யமணி சிவஸ்ரீ. நா. யோகீஸ்வரக்குருக்கள தலைமையில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. முருகப் பெருமான் அடியார்கள் யாவரும் வருகை தருவதோடு;

விரைவில் ஆலய திருப்பணி வேலைகளை பூர்த்தி செய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெற அடியார்கள் வேண்டிய நிதியுதவிகளைத் தந்துதவுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
அறங்காவலர்கள

## திருமண வாழ்த்துக்கள்

இன்றைய நன்னாளில் இல்லறம் எனும் நல்லறந்தனில் இணையும்

மணமகன் :- திருநிறைச்செல்வன் லோறன்ஸ்

மணமகள் :-திருநிறைச்செல்வி அன்ரனி மரியசரினா

தம்பதிகள் இல்வாழ்வில் எல்லா இன்ப நலனும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்

வலம்புரிக் குடும்பம்

## வாழ்த்துகின்றோம்



இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்பரத நாட்டிய அரங்கேற்றம் நிகழ்த்தும் செல்வி

சோபனா நந்தகுமார்

அவர்களை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்

திரு.திருமதி சு.துரைசிங்கம்

(C/5753)

## யாழ்/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

150 வது ஆண்டு விழாச் சபை

அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

07.02.2003அன்று நடாத்தப்பட்டது

முதலாம் இடம்....... 09457
இரண்டாம் இடம் .....03217
மூன்றாமிடம் .......... 08299

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 01........12420 | 06......09845 |
| 02.........03096 | 07......01966 |
| 03.........01069 | 08.....02965 |
| 04.........09466 | 09.....13585 |
| 05........10876 | 10......11461 |

பரிசுகளை 28.02.2003க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்

S.K தங்கவடிவேல்
செயலாளர்
150வது ஆண்டு விழாச்சபை

(5754)

## 81வது சர்வதேச கூட்டுறவு தினம்

### பாடசாலைகளுக்கான மாவட்ட ரீதியிலான சித்திரம்,கட்டுரை,பேச்சு மற்றும் வினா விடைப் போட்டிகள்

81வது சர்வதேச கூட்டுறவு தினம் 2003 ஜூலை மாதம் முதல் சனிக்கிழமை அன்று கொண்டாடப்படவுள்ளது அதனை நினைவு கூருமுகமாக இம் முறையும் பாடசாலை மாணவர்களுக்கான மாவட்ட ரீதியினாலான பல போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் 10-11 மற்றும் 12-13தரங்களுக்காக நடத்தப்படும்.அவற்றில் தமிழ் மொழியில் போட்டியாளர்கள் பங்கு கொள்ளலாம்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்கட்கு பணப் பரிசுகள் மற்றும் அன்பளிப்புக்கள் சான்றிதழ்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| விடயம் | தரம் | தலையங்கம் |
|---|---|---|
| கட்டுரை,பேச்சுப் போட்டி மற்றும் சித்திரம் | 10-11 | 1. கூட்டுறவும் தேசிய ஒற்றுமையும்<br>2. கூட்டுறவின் ஊடாக நிலையான அபிவிருத்தி<br>3. பாடசாலை கூட்டுறவுகளின் ஊடாகச் செய்யக் கூடிய நற்பணிகள |
| கட்டுரை,பேச்சுப் போட்டி மற்றும் சித்திரம் | 12-13 | 1.கூட்டுறவுக் கொள்கையின் ஊடாக சமூக நற்பண்பு அபிவிருத்தி<br>2.சிறந்த கூட்டுறவாளன் சிறந்த பிரஜையாகும்.<br>3.பாடசாலைக் கூட்டுறவானது எதிர்கால தலைமைத்துவத்தின் அத்திபாரம் ஆகும் |

கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளுக்கான தாம் விரும்பிய தலையங்கம் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கலாம்.எனினும் பேச்சுப்போட்டிகளின் பொருட்டு உரிய மூன்று தலையங்கங்களுள் ஒரு தலையங்கம் போட்டி இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும். இப்போட்டிகள் மாவட்ட,மாகாணமற்றும் தேசிய மட்டங்களில் நடத்தப்படும். மாவட்ட மட்டத்தில் முதலிடத்தினைப்பெறும் போட்டியாளர் மாத்திரம் மாகாணமட்டத்திற்கும் மாகாணமட்டத்தில் முதலிடத்தினைப் பெறும் போட்டியாளர் மாத்திரம் தேசிய மட்டத்திலான போட்டிக்கும் தெரிவு செய்யப்படுவர் வினாவிடைப்போட்டிகளுக்காக ஒரு போட்டிமாத்திரமே நடத்தப்படும்.இப்போட்டியின்போது மாணவர்கள் தாம் விரும்பிய மொழிமூலமான வினாவினைப் பெற்றுக் கொள்ளவும் விடையளிக்கவும் முடியும்.வினாவிடைக்கான குழுவானது ஒரு பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 4 மாணவர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.அதனையும் மாவட்ட,மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் மாவட்டத்தின் சகல பாடசாலைகளும் பங்கு கொள்ளலாம். போட்டிகளுக்குத் தோற்றும் மாணவர்கள் தத்தமது விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களை யாழ்மாவட்ட கூட்டுறவுசபையில் பெற்றுக் கொள்ளலாம்**

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டிய கடைசித்திகதி 2003 -03-31 ஆகும்**

போட்டிகளுக்கான கால அட்டவணை யாழ்மாவட்டக் கூட்டுறவுச்சபையின் செயலாளரினால் அதிபர்கட்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்

செயலாளர்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை

வீரசிங்கம் ம்ண்டப் கட்டிடத் தொகுதி (2வது மாடி)
12,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(5755)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.